அன்பளிப்பு 40P

# களத்தில்

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளை தாங்கிவரும் பத்திரிகை 05. 02. 1993

### வன்னியில் இராணுவ நடவடிக்கை

வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் சிறீலங்கா படையினர் பாரிய இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்துள்ளனர். மிக மோசமான குண்டு வீச்சுக்களும் எறிகணைத் தாக்குதல்களும் நடத்தப்படுகின்றன. பொதுமக்களின் சொத்துக்கள் பெருமளவில் நாசமாக்கப்பட்டுள்ளதாகவும் காடுகள் தீப்பிடித்து எரிவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்நடவடிக்கைகளுக்கு ஆயத்தமாக கடந்த சில வாரங்களாக வவுனியா, மன்னார் பகுதிகளிலுள்ள சிறீலங்காப் படைமுகாம்களில் பெருமளவில் ஆயுத தளபாட மற்றும் படைக் குவிப்பு இடம்பெற்று வந்தது. திருகோணமலைக்கு விஜயம் செய்த பிரேமதாசா இனப்பிரச்சினைக்கு மிகவிரைவில் தீர்வு காணப்படுமென உறுதி கூறிய ஒரு சில தினங்களுக்குள் இவ் வெறித்தாக்குதல்கள் ஆரம்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# பிரபா அமைதிக்கு அழைப்பு

## சிறீலங்காவோ பலப்பரீட்சைக்கு திட்டம்



தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தம்மைச் சந்தித்த கொழும்பு மேற்றாணியார் கென்னத் பெர்னான்டோவிடம் அமைதித் தீர்வுக்கான அழைப்பை விடுத்துள்ள போதிலும் சிறீலங்கா பௌத்த சிங்கள பேரினவாத அரசு அதைப் பொருட்படுத்தாமல் இன அழிப்புக்கான நடவடிக்கைகளிலேயே தொடர்ந்தும் அக்கறை காட்டி வருகிறது.

கூட்டுப்படைத் தலைமையகத்தை அநுராதபுரத்திற்கு மாற்றியுள்ள சிறீலங்கா படையினர் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளையும் ஆயுத சேகரிப்பு நடவடிக்கைகளையும் முடுக்கி விட்டுள்ளனர்.

### "புக்காரா விமானங்கள்"

FAMA58A புக்காரா போர் விமானங்கள் நான்கை சிறீலங்கா ஆர்ஜென்ரீனாவிடமிருந்து வாங்கியுள்ளது. 20 மி. மீற்றர் பீரங்கிகள் இரண்டும் நான்கு இயந்திரத் துப்பாக்கிகளையும் கொண்டுள்ள இவ் புக்காரா விமானம் ஒவ்வொன்றும் 1500 கிலோ கிராம் எடையுள்ள குண்டுகள், எறிகணைகள், ஏவுகணைகள் போன்றவற்றை தாங்கிச் செல்லும் ஆற்றல் வாய்ந்தது. 1969 ல் வெள்ளோட்டம் விடப்பட்ட இவ் விமானம் 1982 ல் போக்லாண்ட்ஸ் சண்டையில் பயன்படுத்தப்பட்டு பிரபலமாகியது. 500 கி. மீ. மணிக்கு செல்லக்கூடிய இவ் விமானம் 3. 04 கி. மீற்றர் தாக்குதல் வீச்சைக் கொண்டுள்ளது. இவ்விமானங்கள் நான்கும் கொழும்பை வந்தடைந்துள்ளன.

### MI 8 ரஸ்ய - FAC பிரான்ஸ் உலங்குவானூர்திகள்

32 பேர் அமரக்கூடிய ரஸ்சிய ரக உலங்குவானூர்திகளை சிறீலங்கா இராணுவம் வாங்கியுள்ளதாகவும், ***தொடர்ச்சி 12ம் பக்கம் ....***



"புக்காரா விமானம்"



MI 8 ரஸ்ய உலங்கு வானூர்தி

### உலக அமைதிக்கெதிரான குற்றம்

## இந்தியாமேல் சர்வதேச விசாரணை வேண்டும்

### ❁ சர்வதேச யுத்த குற்றச்செயல் விசாரணைக்குழு வற்புறுத்தல்

இந்தியா, கிட்டு அவர்களின் 'அமைதியை ஏற்படுத்துவதற்கான பயணத்தைத்' தடை செய்ததன் மூலம் "நூறம்பேர்க்" விசாரணைக்குழுவின் அடிப்படையில் உலக அமைதிக்கெதிரான குற்றத்தைச் செய்துள்ளது. எனவே ஆசியாவினதும் உலகினதும் சமாதானத்தைப் பேணுவதற்கு இந்தியாமேல் கிட்டு அவர்களின் மரணத்திற்கான காரணங்கள் குறித்து சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இவ்வாறு சர்வதேச யுத்தக் குற்றச் செயல்களுக்கான விசாரணைக்குழு வற்புறுத்தியுள்ளது. சர்வதேச யுத்த குற்றச் செயல் விசாரணைக்குழு இலண்டனில் வெளியிட்ட அறிக்கை வருமாறு:-

:3-01-1993ல் கிட்டு என எல்லோராலும் அழைக்கப்படும் சதாசிவம் கிருஸ்ணகுமார், சிறீலங்காவில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளோர் இடையே அமைதியை ஏற்படுத்துவதற்காக பயணம் செய்து கொண்டிருக்கையில், சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து, அவருக்கெதிராக இந்தியா எடுத்த நடவடிக்கைகள் கடற்கொள்ளைத் தனமானது மட்டுமல்லாது உலக அமைதிக் கெதிரான குற்றமுமாகும்.

அமைதிக்கான முயற்சிகளை அல்லது பேச்சுவார்த்தைகளை தடுக்கும் அல்லது சீர்குலைக்கும் எத்தகைய முயற்சிகளும் 'அமைதிக் கெதிரான குற்றம்' ஆகும் என நூறம்பேர்க் (Nuremberg) விசாரணைக்குழு தெளிவாக வரைவிலக்கணம் அளித்துள்ளது.

பிரிட்டிஸ் சர்வதேச யுத்த விசாரணைக்குழுவானது 1990 -91 ல் நடைபெற்ற வளைகுடா யுத்தத்தில் அமெரிக்காவினதும் அதன் சார்பாளர்களினதும் யுத்தக் குற்றச் செயல்களை விசாரணை செய்வதற்காக முன்னாள் அமெரிக்க சட்டமா அதிபர் ராம்சே கிளாக் அவர்களது முயற்சியால் நிறுவப்பட்டது.

வளைகுடா யுத்தத்திற்கான காரணங்கள், அதன் விளைவுகள், தொடர்பான சாட்சியங்களை, சர்வதேச வழக்கறிஞர்கள் உட்பட வாழ்க்கையின் பல்வேறு தரப்பட்ட மக்களிடையிருந்தும், இலண்டன், மன்செஸ்டர், பேர்மிங்காம், பிரட்போர்ட் ஆகிய இடங்களில் நேரடி கேட்புமூலமும் நாம் பதிவு செய்தோம்.

இந்த விசாரணைக்குழுவில் பங்குபற்றிய அனைவரையும், சர்வதேச வழக்கறிஞர்கள், பத்திரிகையாளர்கள், அமைதிப்பணிகள், தொழிற்சங்கப் பணிகள் ஆகியவற்றில் ஈடுபட்டிருப்பவர்களையும், முன்னேற்றகரமான கருத்துக்கள் கொண்ட நாகரீக மக்கள் அனைவரையும் திரு. கிட்டு மிகச் சந்தேகத்திற்கு இடமான முறையில் இறந்துள்ளமை தொடர்பாக சர்வதேச விசாரணை ஒன்றை நடாத்தும்படி வற்புறுத்துமாறு வேண்டுகிறோம். இத்தகைய விசாரணை சர்வதேசச் சட்டத்தின் கீழ் நீதியை நிலைநாட்டுவதற்கும், ஆசியப் பிராந்தியத்தினதும் முழு உலகினதும் அமைதியைப் பாதுகாப்பதற்கும் மிக மிக அவசியமானதொன்று என நாம் கருதுகிறோம். ■

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

## அழிவில்லா சக்தி

உலகத் தமிழர்கள் அதிர்ந்து நின்றனர். தமிழீழத்தார் ஒரு கணம் செயலிழந்து போயினர். ஆம், தலைவன் கிட்டு அவர்கள் இந்தியாவின் கோரச்சதியால் ஒன்பது சக போராளிகளுடன் தற்கொடையானார் என்ற செய்தி கேட்டு முழுத்தமிழ் உலகுமே சோக வெள்ளத்தில் மூழ்கியது. தமிழர்களின் வரலாற்றில் மிகச் சோகதினமாக 16-01-93 மாறிவிட்டது.

கிட்டு அவர்கள் ஒடுக்குமுறைகள், இனக்கொலைகளுக்கெதிராக கிளர்ந்தெழுந்த தமிழ் மறவன். பதினெட்டும் நிரம்பாத வயதிலேயே மனிதாபிமான உணர்வால் இனமானத் துடிப்பால் 1978 ல் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினூடாக தன் வாழ்வை தமிழர்களின் நல்வாழ்வுக்காக அர்ப்பணித்தார். அந்த உண்மையான அர்ப்பணிப்பு, அவருடைய பேச்சு மூச்சு அனைத்தும் தமிழீழ மண்மீட்பு எனும் நிலையாக மாறி, அவரது வாழ்வே தமிழீழ மண்மீட்புப் போரின் பிரிக்கப்பட முடியாத அத்தியாயமாகிவிட்டது. தியாக நெஞ்சும் வீரஉணர்வும் கிட்டுவை யாழ் மண்ணின் தளபதியாக்கியது. தளபதி கிட்டு யாழ் மண்ணில் படைத்த வீர காவியங்கள் தமிழீழ வரலாற்றில் அவரை விடுதலைப் போரின் தளபதியாகவே மாற்றியது. அஞ்சா நெஞ்சுடன் போர் முனையில் எதிரியை ஓட ஓட விரட்டிய அதே கிட்டு, இராஜதந்திர உணர்வுடன் அதே எதிரியிடம் சாணக்கியமான பேச்சுவார்த்தைகளை நடாத்தியதும் உண்டு. அதே போர்வீரன் -உணவுத் தடையினால்தான் எமது மண்மீட்பு போரை சீர்குலைக்க சிறீலங்கா முயலும் எனத் தீர்க்கதரிசனமாக கூறியபோது கிட்டு போர் வீரனாக மட்டும் தெரியவில்லை. இனத்தின் தலைமைத்துவத்தில் தேசியத் தலைவர் பிரபாகரனின் துணைவனாகவும் காட்சியளித்தார். இந்த நல்லாக்க சிந்தனையின் விளைவாக சிறீலங்காவால் அகதிகளாக தம் சொந்த மண்ணிலேயே இடம்பெயரும் மக்களுக்கு வெறும் அகதி முகாம்களை அமைக்காது, வாழ்வு அளிக்கப்பட வேண்டும் என கிட்டு கருதினார். இதன் பயனாக உருவானதுதான் தமிழீழத்தில் போர்க்கால சூழ்நிலையிலும் எதிர் காலத்திலும் தமிழீழத்தின் உறுதிக்கு உதவ அமைக்கப்பட்ட தமிழீழ ஆய்வு நிறுவனம். இன்று அது தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமாகி தமிழீழ பொருளாதாரத்தின் முதுகெலும்பாக மாறி நிற்கிறது.

பெண் விடுதலையை நேசித்த கிட்டு அவர்களின் ஆசியில் உருப்பெற்ற சுதந்திரப் பறவைகள், இன்று தமிழீழப் பெண்களின் விடுதலைக்கு பக்கத் துணையாக நிற்கிறது. பெண் என்றால் பேதை என்ற பழங்கதைகள் மாறி இன்று, பெண் என்றால் அவளும் சளைக்காது தன் மண்ணின் மீட்பை முன்னெடுக்கலாம் -முன்னெடுப்பாள் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த பெண் இன எழுச்சியின் வரலாற்றிலும் கிட்டுவின் செயல்திறன் என்றும் பேசப்பட்டுக் கொண்டேயிருக்கப்போகிறது.

கிட்டு அவர்கள் முற்று முழுதான விடுதலையைத் தேடினார். அவரின் பேச்சுக்கள் வெறும் இராணுவ வெற்றிக்கான வழிகாட்டல்கள் அல்ல. ஒரு மனதில் படிந்துள்ள அடிமையுணர்வை கிழித்தெறியும் அம்புகள். அதேவேளை மற்றவனை அடிமைப்படுத்தக் கூடாது என்பதிலும் அவர் மிகுந்த அக்கறை காட்டினார். பெண்ணடிமை -சாதி அடிமை -மத அடிமை -சீதன அடிமை போன்ற அனைத்து அடிமைத்துவ வடிவங்களையும் உடைக்க வேண்டுமெனத் துடித்தார். கல்விதான் ஒரு சமுதாயத்தின் சத்து -சொத்து. எனவே எந்தச் சூழ் நிலையிலும், எந்த இன்னலிலும் கல்வி வளர்க்கப்பட வேண்டும் என்பது அவர் கருத்து.

அதேபோல் ஒவ்வொரு நல்லாக்க எண்ணங்களையும், நல்லாக்க வடிவங்களையும் அவர் ஆராய்ந்து அதில் உள்ள சிறப்புக்களை தமிழர் சொத்தாக நினைத்தார். ஆயுதப் போரின் தளபதியான அவர் அகிம்சைப் போரின் சக்தியையும் வெறுத்ததில்லை. காந்தி எவ்வாறு மக்களை, மக்கள் சக்தியாக ஒருங்கிணைத்தார், எவ்வாறு சேவை அமைப்புக்களை நிறுவினார் என்று பேசவும் தயங்கியதில்லை. இதனாலேயே அமைதிக்கு என அவர் எப்போதும் உழைத்தார். அமைதியைத் தேடுவதற்குத்தான் போராடுகிறோம், எனவே போராட்டமும் -அமைதியைத் தேடலும் முரணானவை அல்ல என்பது அவர் கருத்து. போராட்டம் வெற்றி பெற்றால் அமைதி வரும். அமைதி வந்தால் போராட்டம் வெற்றிபெறும் என்பதை அவர் உணர்ந்திருந்தார். அதனால் ஒரு புறம் சர்வதேச நிலையில் அமைதி வழித்தீர்வுக்கு வழி காண உழைத்தார். மறுபுறம் சிறீலங்கா அமைதியை ஏற்படுத்த மறுத்தால் போராட்டத்தால் அமைதி ஏற்படுத்தப்படும் என்பதில் உறுதியுடன் இருந்தார்.

எந்த அமைதியைத் தேடினாரோ, அந்த அமைதியை தன் மண்ணில் நிலை நிறுத்த அமைதிப் பணியில் சென்ற அவரை இந்திய ஏகாதிபத்திய ஆதிக்க விஸ்தரிப்பாளர்கள் இடைமறித்தனர். பண்பின் குன்று -வீரத்தின் விளை நிலம் -தியாகமே வாழ்வாகக் கொண்ட உத்தமன் தற்கொடையாகி தமிழீழ வரலாற்றின் திருப்பு முனையாகி நிற்கிறான். கனவுக் காட்சிகளை கிட்டு உருவாக்கவில்லை. நனவுக் காட்சிகளையே அவர் மண்ணில் தன் சொல்லால் செயலால் படைத்தார். ஆகவே கிட்டு என்ற ஆக்க சக்தி இன்று தமிழீழ விடுதலையை விரும்புகிற பல்லாயிரம், பல இலட்சம் தமிழர்களாக பரிமாணமடைந்து நிற்கிறது. எனவேதான் கிட்டு அழிக்கப்படவில்லை, அழிக்கப்படவும் முடியாது. என்று தமிழீழக் கொடி உலக அரங்கத்தில் பட்டொளி வீசிப் பறக்கின்றதோ அன்றுதான் 'கிட்டு' வின் ஆத்மா அமைதியடையும். ஆகவே தமிழீழ விடுதலையை விரைவாக முன்னெடுக்க 'கிட்டு'எனும் விடுதலைத் தீபம் என்றும் எம்மை வழிநடத்துவதாக. வெல்வோம் தமிழீழம்! கிட்டுவின் கனவை நனவாக்குவோம்!! ■

# "பட்டினிச்சாவிலிருந்து எமது மக்களைக் காப்பாற்றுங்கள்"

## யாழ் மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதிக்கு நீண்ட மகஜர்

யாழ். நகரில்யாழ்மாவட்டத்திலுள்ள பல்வேறு வெகுஜன அமைப்புக்கள், தொண்டர் ஸ்தாபனங்கள், அரசசார்பற்ற, அரசநிறுவனங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் மற்றும் சனசமூக அமைப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய வெகுஜன ஒன்றியம் நடத்திய மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியின் பின்னர் யாழ்மாவட்டத்தின் மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. பத்தினியம்மா திலகநாயகம் போலிடம் கையளித்த மகஜரின் விபரம் வருமாறு:

யாழ்ப்பாண மாவட்டத்து மக்களைப் பிரதிநிதிப்படுத்தும் பல்வேறு வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகளாகிய நாங்கள் வடபகுதி மக்கள் படும் பெரும் அவலங்களையும், துயரங்களையும் தங்களின் மேலான கவனத்திற்கு சமர்ப்பிக்கிறோம்.

தமிழ் மக்களுக்கு எதிராக அர்த்தமற்ற மிகப்பெரிய அளவிலான யுத்தத்தை நடத்திக்கொண்டிருக்கிறீர்கள். இதனால் தமிழ் மக்களாகிய நாம் நாளாந்தம் பேரழிவைச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்.

கடந்த 32 மாதங்களாக தமிழ் மக்களுக்கு எதிராக பொருளாதாரத்தடை விதிக்கப்பட்டுள்ளது. சொந்த மக்களுக்கு எதிராக இவ்வாறான பொருளாதாரத்தடையை விதித்திருப்பது மனிதாபிமானமற்ற செயலாகும்.

32 மாதங்களாக யாழ் உணவுத் திணைக்களத்திற்கு எவ்வித உணவுப் பொருட்களும் அனுப்பிவைக்கப் படவில்லை. யாழ் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் விமானக் குண்டுவீச்சினால் சேதமாக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்திற்கும் உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப் படாததினால் இங்குள்ள பல நோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் உணவுப் பொருட்களைப் பெற முடியாம ல் கஸ்ரப்படவேண்டியுள்ளது.

இதேவேளையில் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்தினால் யாழ் செயலக புனர்வாழ்வுப்பகுதிக்கு அனுப்பிவைக்கப்படும் சிறு அளவிலான உணவுப்பொருட்கள் யாழ். மாவட்ட மக்களின் மொத்த உணவுத் தேவையின் 20 சதவீதத்தைக் கூட பூர்த்திசெய்யக்கூடியதாக இல்லை.

யாழ். மாவட்ட மக்களின் தேவைக்கென வருடமொன்றிற்கு சராசரியாக 82500 மெற்றிக் தொன் அரிசியும், 29700 மெற்றிக் தொன் மாவும், 18150 மெற்றிக் தொன் சீனியும், 12375 மெற்றிக் தொன் தானிய வகைகளும் தேவையென யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

தற்போது யாழ் மாவட்டத்தில் உணவுக் கையிருப்பு முழுமையாக முடிந்துவிட்டது. கொழும்பில் இருந்து கடல் மார்க்கமாகவோ, தரைமார்க்கமாகவோ அத்தியவசியப் பொருட்களை எடுத்துவரமுடியாத நிலைமையே நிலவுகின்றது. யாழ் மாவட்டத்திற்கான தரைமார்க்கமான போக்குவரத்து துண்டிக்கப்பட்டும், தடைசெய்யப்பட்டும் இருப்பதினால் பிறமாவட்டங்களில் இருந்து கூட கூட்டுறவுச்சங்கங்களோ, தனியார் வர்த்தகர்களோ லொறிகள் மூலமாக உணவுப் பொருட்களைக் கொண்டுவரமுடியாத துர்ப்பாக்கிய நிலை உருவாகியுள்ளது.

இதனால் பொருட்களின் விலைகள் பன்மடங்கு அதிகரித்துள்ளது. ஏற்கனவே பாதிப்புக்குள்ளாகியிருக்கும் மக்கள் இதனால் மேலும் பாதிப்புக்குள்ளாகி பட்டினிச் சாவை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

இராணுவ நடவடிக்கைகள் கண்மூடித்தனமான தாக்குதல்கள் காரணமாக தொழிட்சாலைகள் தொழில் வழங்கு நிலையங்கள் என்பன அழிக்கப்பட்டும் மூடப்பட்டும் உள்ளன. இதனால் 2 லட்சத்திற்கும் அதிகமானோர் தமது தொழில் வாய்ப்புக்களை முழுமையாக இழந்துள்ளனர். அன்றாடம் கூலிவேலை செய்துவந்த சுமார் 2 லட்சத்துப் பத்தாயிரம் பேர் தமது தொழில்களை இழந்துள்ளனர். வருமானம் எதுவுமின்றி நிர்க்கதியாகியுள்ள இவர்களால் எப்படி அதிக விலைகொடுத்து பொருட்களை வாங்கமுடியும்?

கொழும்பில் ஒரு கிலோ 18 ரூபாவாக விற்பனையாகும் நாட்டரிசி யாழ் மாவட்டத்தில் 46 ரூபாவாக விற்பனையாகின்றது. 15 ரூபா 50 சதமாக உள்ள வெள்ளைப் பச்சரிசி 34 ரூபா. 11 ரூபா 30 சதமாக விற்பனையாகும் ஒரு கிலோ மா யாழ் மாவட்டத்தில் 26 ரூபாவாக உள்ளது. 10 ரூபாவாக விற்பனையாகும் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் யாழ் மாவட்டத்தில் 210 ரூபாவாக விற்பனையாகின்றது.

45 ரூபாவாக உள்ள ஒரு லீற்றர் தேங்காய் எண்ணெய் 155 ரூபா. ஒரு ரூபாவிற்கு விற்பனையாகும் ஒரு தீப்பெட்டி யாழ் மாவட்டத்தில் 8 ரூபா. 55 ரூபாவாகவுள்ள ஒரு கிலோ பருப்பு யாழ் மாவட்டத்தில் 110 ரூபா. எனவே வட பகுதிக்கு விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தடையை நீக்கி எமது மக்களின் உணவுத் தேவையை பூர்த்தி செய்யக்கூடியளவு அத்தியாவசிய உணவுப் பொருட்களை அனுப்பி பட்டினிச் சாவிலிருந்து எமது மக்களைக் காப்பாற்றுமாறு வேண்டுகிறோம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் ஒரேயொரு தரைமார்க்கமான போக்கு வரத்துப்பாதை ஆனையிறவாகும். இப்பாதை 1990 ஜுன் மாதம் 10ம் திகதி யுத்தம் தொடங்கியதுடன் மூடப்பட்டுவிட்டது. இதனால் எமது மக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பயங்கரமானவையாகும். அதன் பின்னர் பூநகரி, கொம்படி, ஊரியான், கிளாலி கடல் நீரேரியூடாகப் பிரயாணம் செய்யவேண்டி ஏற்பட்டது. போக்குவரத்துக் கஸ்டம் காரணமாக ஒரு தனிமனிதன் எவ்வளவு பாதிப்புக்குள்ளாவான் என்பது தாங்கள் அறிந்த ஒன்றே. முப்படைகளின் நடவடிக்கைகளின் மத்தியிலும் வேறு வழியின்றி கிளாலிக் கடல் நீரேரியூடாக பிரயாணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

2-1-93 அன்று கிளாலிக் கடற்பரப்பில் பிரயாணம் செய்தது அப்பாவிப் பொதுமக்களென அறிந்திருந்தும் கடற்படையினர் சுட்டும், வெட்டியும் 50க்கும் மேற்பட்டவர்களை படுகொலை செய்துள்ளனர். இது அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயலாகும்.

ஆதலால் பூநகரிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமை அகற்றி எமது மக்கள் சுதந்திரமாகப் பிரயாணம் செய்யக்கூடிய வகையில் பூநகரி-சங்குப்பிட்டிப் பாதையை திறந்து பாதிப்புக்குள்ளான எமது மக்களின் துன்பங்களை நீக்குமாறு வேண்டுகிறோம்.

இன்று யாழ் குடாநாட்டில் இராணுவ நடவடிக்கை என்ற போர்வையில் மக்கள் செறிந்து வாழ்கின்ற குடியிருப்புக்களை நோக்கி செல்வீச்சுக்கள், குண்டுவீச்சு விமானங்களின் குண்டுத்தாக்குதல்கள், கடற்படையினரின் பீரங்கித் தாக்குதல்கள் என்பன தொடர்கின்றன.

இராணுவ நடவடிக்கைகள், தாக்குதல்கள் காரணமாக 82 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 4 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து அகதியாகியுள்ளனர். இவர்களுக்குத் தேவையான கல்வி, சுகாதாரம், வதிவிடம், தொழில் வாய்ப்புக்கள் எதுவும் போதியளவில் ஏற்படுத்திக் கொடுக்காத நிலையில் மனோநிலை பாதிக்கப்பட்டு விரக்தியடைந்துள்ளனர். இவர்கள் மனிதாபிமான ரீதியில் கவனிக்கப்பவேண்டியவர்கள் என்பது கருத்திற்கொள்ளப்படவேண்டியதொன்றாகும். பல்வேறு பாதிப்புகளுக்குள்ளாகியிருக்கும் மக்கள் தற்போது அமைதி சமாதானம் என்பவற்றையே வேண்டி நிற்கின்றனர்.

பாடசாலை மாணவர்களுக்குத் தேவையான உபகரணங்கள், வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படாததால் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. தென்னிலங்கையில் நவீன கொம்பியூட்டர் முறையிலான கல்வி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் இங்கு குறைந்தளவிலான கல்வி உபகரணங்கள் கூட கிடைப்பதில்லை. யாழ் பல்கலைக்கழக கல்வி மேம்பாட்டுக்கான வெளிநாட்டு உதவிவழங்கும் நிறுவனங்கள் கொடுத்த உபகரணங்களை எடுத்து வருவதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் மறுத்துவிட்டது. இதன் மூலம் எமது மாணவர்களின் கல்வி திட்டமிட்டு பாழடிக்கப்படுகின்றது.

மருத்துவ வசதியின்மையாலும், போசாக்கின்மையாலும் சிறுவர்கள், கர்ப்பிணிகள், தாய்மார்களின் உயிரிழப்புக்கள் அதிகரித்து வருகின்றன. உணவு உற்பத்திக்குத் தேவையான உபகரணங்கள் உள்ளீடுகள் இன்றி விவசாயிகள் கஸ்டமடைந்துள்ளார்கள். விவசாய உபகரணங்கள், விளை பொருட்கள், வீடுகள், உடமைகள் என்பன இராணுவ நடவடிக்கைகள்

தொடர்ச்சி 15ம் பக்கம் .

# தமிழ்த் தளபதி கேணல் கிட்டு, இந்திய அரசின் சதிக்கு இரை

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினரும், விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினரும், முன்னாள் யாழ் பிராந்தியத் தளபதியும், விடுதலைப் புலிகளின் சர்வதேச செயலகப் பொறுப்பாளருமான கேணல் கிட்டு, 16-01-1993 அன்று இந்திய வெறியரசின் கோரச் சதிக்கு இரையாகிவிட்டார். வெளிநாடொன்றிலிருந்து, AHAD என்ற கப்பலில் தமிழீழம் நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளையிலேயே இவரும் ஒன்பது போராளிகளும் கப்பலில் பணிபுரியும் மேலும் ஒன்பது தமிழர்களும் இந்திய அரசின் கடற்படையால் சுற்றிவளைக்கப்பட்டனர். இந்தியக் கரையில் இருந்து சுமார் 440 கடல் மைல்களுக்கு அப்பால் சுற்றிவளைக்கப்பட்ட இவர்களது கப்பல் இந்தியக் கடற்படையால் பலாத்கார்மாக இந்தியக் கடல் எல்லைக்குள் கொண்டு செல்லப்பட்டது. 13ம் திகதி இரவு 10 மணியளவில் சுற்றிவளைக்கப்பட்ட இக்கப்பல் 16ஆம் திகதி இந்திய எல்லைக்குள் கொண்டு செல்லப்பட்டதும் கிட்டுவையும் ஏனையோரையும் சரணடையும்படி கடும் நிர்ப்பந்தம் இந்தியப்படையால் பிரயோகிக்கப்பட்டது. கப்பல் மீது தாக்குதலும் நடத்தப்பட்டது. இந்த நிலையில் தளபதி கிட்டுவும் ஒன்பது போராளிகளும் தம்மைத் தாமே அழித்து வீரமரணத்தைத் தழுவிக் கொண்டுள்ளனர். ஏனைய கப்பல் பணியாளர்கள் இந்தியக் கடற்படையால் உயிருடன் கைது செய்யப்பட்டுள்ளனர். விசாரணை என்ற பேரில் அவர்கள் கடும் சித்திரவதைகளுக்கு உள்ளாகியுள்ளனர்.

சர்வதேச நாடுகளின் மேற்பார்வையில் சிறீலங்காவுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்வது குறித்தும் இது விடயத்தில் சர்வதேச நாடுகள் கொண்டுள்ள அபிப்பிராயங்கள்அக்கறைகள் பற்றியும் தலைவர் பிரபாகரனுடன் கலந்தாலோசிக்கச் சென்ற வேளையிலேயே தளபதி கிட்டு இந்திய அரசால் இக்கொடுஞ் செயலுக்கு இலக்கானார். சமாதானத்திற்கும் சுதந்திரத்திற்கும் இந்திய அரசு எதிரானது என்பது வரலாறு. திலீபனைக் கொன்ற இந்திய அரசு குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரண்டு போராளிகளை நம்பிக்கைத் துரோகம் செய்து சாகடித்தது. சமாதானத் தூதுவனாக இந்திய அரசாலேயே அனுப்பப்பட்ட ஜொனி இந்தியப் படையாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். அமைதியை வேண்டி உண்ணாவிரதமிருந்த பூபதி அம்மா சாகவிடப்பட்டார். இன்று சமாதானத் தூதுவனாகச் சென்ற கிட்டுவையும் இந்தியக் கொடுங்கோண்மை அரசு தனது சதிப்பசிக்கு இரையாக்கிக் கொண்டது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் தமிழ் மக்களின் தேசிய எழுச்சியையும் நாசம் செய்யும் இந்திய அரசின் திட்டமிட்ட சதிவலைப் பின்னல் தமிழீழத்தின் மீதும் தமிழகத்தின் மீதும் இலாவகமாகப் போர்த்தப்பட்டுள்ளது. இந்த சதிவலையை கிழித்துக் கொண்டு தமிழினம் வெளியேறுவது எப்போது? அகண்ட இந்த உலகத்தில் தமிழர்கள் என்றொரு தொன்மையும் சிறப்பும் கொண்ட இனம் இருந்தது, என்ற வரலாற்று குறிப்புகளாக மாறுவதைத் தடுப்பதில், உலகத் தமிழர்கள் எந்தளவிற்கு அக்கறையுடனும் உளசுத்தியுடனும் ஈடுபட்டுள்ளனர்? தமிழர்களை எழுச்சி கொள்ளவும், மீட்சி பெறவும் இத்தகைய தற்கொடைகள் அவசியமாகின்றன. ஆனாலும் தூய்மையான, இறுக்கமான, உணர்வுமயப்பட்ட, விலைமதிப்பற்ற இத்தற்கொடைகள் உலகத் தமிழிர்களை எந்தளவிற்கு **எழுந்து உட்கார வைத்துள்ளது?**

கடலில் கரைந்து போகின்றார்கள். கந்தகப் புகை மண்டலத்தில் கலந்து போகின்றார்கள். செந்நிறத் தீ நாக்குகளில் மறைந்து போகின்றார்கள். குண்டைக் கட்டிக் கொண்டு எதிரியின் குகைக்குள் நுழைகின்றார்கள். இந்தப் புனிதமான அர்ப்பணிப்புகள் சுயத்தை வென்றதனால் ஏற்பட்டவை. தமிழ் இனம் உலகில் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்ற அகத்தின் தூண்டலே இந்தச் சுய வதைகளின் அடிப்படை. இந்தப் புனிதமான வரலாற்றின் தொடர்ச்சியை உணர்ந்து கொண்டு, உலகத் தமிழ் இனம் உணர்வால் இணைந்து உரம்கொண்டு போராடித்தான் ஆக வேண்டும். இந்திய அரசின் சதிவலைப் பின்னலை கிழித்துக் கொண்டு வெளியேற, சிந்தனைகளைப் படைப்பதோடு தாக்கமான செயலிலும் ஈடுபடுவோம். இன்றைய கால கட்டம், தமிழர்களின் சுதந்திரமான வாழ்வைத் தீர்மானிப்பது. சிறப்பான ஒரு தேசிய இனமான தமிழ் இனம், அகதிகளாகி அடிமைகளாகி பிறதேசிய இனங்களின் பிடியில் கரைந்து போவதைத் தடுக்கவேண்டிய காலம். இக்கட்டான, சோதனையான இந்தக் காலகட்டத்தை வெற்றி கொள்ள, சுயலாபம் கருதும் தமிழ் அரசியல்வாதிகளை விட்டுவிட்டு இனமான உணர்வுள்ள தமிழர்களை இணைப்போம். எதிரிகளின் தடைகளை முறியடிப்போம். இந்த உலகில் மானமுள்ள தமிழர்களாக நிமிர்வோம்.

**உணர்வால் இணைவோம்**

**சர்வதேசச் செயலகம், தமிழீழ விடுதலைப் புலிகள்**

# கொழும்பு ஆயர் கென்னத்தின் நல்லெண்ண விஜயம்

இலங்கையில் உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் திருச்சபை ஆயர் அதி. வண. ஜோஜ் கென்னத் பெர்னாண்டோ தலைமையிலான குழு ஒன்று யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துடன் பேச்சுக்கள் நடத்தியது.

கிளாலிப் பாதை தடைசெய்யப்பட்ட பாதை. ஆனையிறவுப் பாதை பாவிக்கப்படுவதில்லை. எனவே தடையை மீறி யாழ் குடாநாட்டிற்குள் சமாதானக்குழு சென்றுள்ளது.

எந்த ஒரு போராட்டக் காலத்திலும் நடைபெறாத முறையில், போர் நடந்து கொண்டிருக்கும்போது, தம் சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழும் மக்கள் வாத்தியக் கருவிகள் இசைக்க ஆன்மீக ஆராதனைகள், வழிபாடுகள் இவ்வளவு திறமையாக நடாத்துவது இங்குதான் காணப்படுகிறத எனக்கூறி ஆயர் கெனத் பெர்னாண்டோ அவர்கள் மகிழ்ச்சியடைந்தார்.

மனிதாபிமான அடிப்படையில், விடுதலைப் புலிகளால் இலங்கைப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த வயது முதிர்ந்த இரு கைதிகளை வண. கென்னத் பெர்னாண்டோ அவர்களிடம் கையளிக்கப்பட்டமை, சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் நல்லெண்ண முயற்சியாக அமைகின்றது.

விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரனின் காருண்யத்தையும் தியாக மனப்பான்மையையும் கண்டு மிகவும் மகிழ்ச்சியடைந்ததாக ஆயர் தெரிவித்தார். இச்சந்திப்பின்போது, இருபகுதியிலும் நல்லெண்ண முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம் சமாதானத்திற்கான வழியை ஏற்படுத்த முடியும் எனவும் கூறினார். இரண்டு கைதிகளை விடுதலை செய்யவும், மற்றைய கைதிகளை பார்வையிடவுமான கோரிக்கையை ஏற்றுக் கொண்ட தலைவர் பிரபாகரனிடம், என்றும் நன்றியும், மதிப்பும் உடையவராக இருப்பார் எனவும் ஆயர் மேலும் கூறினார்.

சிங்களத் தேசத்திலிருந்து சமாதானத் தூதுவர்களாக யாழ்ப்பாணம் வரவிரும்பும், பௌத்த குருமாரையும், புத்திஜீவிகளையும் அழைத்து வர விரும்பும் ஆயருக்கு எமது சமாதானக் கதவுகள் திறந்தேயிருக்கின்றன எனத் தலைவர் கூறினார்.

சிறை வைக்கப்பட்டிருந்த பொலிசாரை விடுதலை செய்ததான தலைவர் பிரபாவின் நல்லெண்ணம், தெற்கில் சகல தரப்பிலும் பெரிய பாராட்டுப் பெறும் எனவும் ஆயரால் கூறப்பட்டது.

கர்ப்பிணித் தாய்மார்கள், குழந்தைகள், ஆகியோருக்கு போசாக்கை வழங்கத் தக்க வகையில் கொக்குவில் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தினரால் நிர்வகிக்கப்படும் போசாக்கு நிலையத்தை பார்வையிட்ட ஆயர் அதி. வண. கென்னத் பெர்னாண்டோ புதிய போசாக்கு நிலையம் ஒன்றை ஆரம்பிக்கவும், மாதாமாதம் அந்த நிலையத்தைப் பராமரிக்கவும் நிதி வழங்க ஏற்பாடு செய்து தருவதாகவும் உறுதி வழங்கினார்.

நாட்டில் சமாதானமும் சகஜ நிலையும் மீள வருவதற்கு இப்போதே மூன்று விடயங்களை செய்ய வேண்டும் என உரையின்போது ஆயரால் கூறப்பட்டது. அவையாவன:-

1. முதலில் எல்லோரும் ஒன்றுபட்டு இரண்டு பக்கங்களுக்கும், மக்களும் பொருட்களும் பாதுகாப்பாகவும் தடங்கலின்றியும் இலகுவாகப் போய் வருவதை உத்தரவாதம் செய்ய வேண்டும்.

2. தடை செய்யப்பட்ட 48 பொருட்கள் பற்றி பேச்சு வார்த்தை நடத்தி இவற்றில் பல பொருட்கள் மீதான தடையைத் தளர்த்த அரசை வற்புறுத்த வேண்டும்.

3. யுத்தத்தை நிறுத்துவதற்குப் பேச்சு வார்த்தை நடாத்த வேண்டும்.

சிறைகளிலும் முகாம்களிலும் உள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட எமது ஆதரவாளர்களை அரசு விடுதலை செய்தால் கைதிப் பரிமாற்றத்திற்கு நாம் தயார் என திரு. அன்ரன் பாலசிங்கம் ஆயரிடம் கூறினார்.

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ் மாவட்ட ஆயர் அம்பலவாணர், "அரசுடன் விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சு வார்த்தை நடாத்தும் போது, எந்தவித விட்டுக் கொடுப்புக்களும் அற்ற விதத்திலும், ஒரு பலமான நிலையில் இருந்து கொண்டு நிபந்தனையற்ற வகையில் பேச்சு வார்த்தை நடாத்துவதையே நாம் விரும்புகின்றோம்." என்றும் "சமாதானம் ஏற்படுவதை நாம் விரும்புகின்றோம், அதற்காக விடுதலைப் புலிகளின் பலம் பாதுகாக்கப்படல் வேண்டும்." என்றும் தெரிவித்தார். ■

## தமிழகத்தில் பரவலாக குண்டு வெடிப்புகள்

கேணல் கிட்டுவினதும் ஏனைய போராளிகளினதும் மரணத்திற்கு காரணமாக இருந்த இந்திய மத்திய, மாநில அரசுகளைக் கண்டித்து விழுப்புரத்திலும், தென்னாற்காட்டிலும், சேலத்தில் ஆத்தூரிலும், நாகபட்டினத்தில் குடவாலிலும் குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இக்குண்டு வெடிப்புக்களுக்கு தமிழகத்தில் தலைமறைவு இயக்கமாக இயங்கும் தமிழ் விடுதலை இராணுவம் கையெழுத்து துண்டுப் பிரசுரம் மூலம் உரிமை கோரியுள்ளது.

# தூய தமிழ் வழக்கும் அதன் இன்றைய தேவையும்

கலாநிதி இ. பாலசுந்தரம்

சோழர் காலத்தில்தமிழ் மொழியிற் தோன்றிய காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள், உரை நூல்கள் முதலியனவற்றிலே தவிர்க்க முடியாதவாறு அரச, சமய, சமூகக் காரணங்களால் வட சொற்கள் பெரிதும் இடம் பெறலாயின. கம்பர்கூட "தேவ பாடை" என்று வடமொழிக்கு ஏற்றம் கொடுத்துள்ளார். அக்கால உரைகாரரும் வடமொழிக்கு ஏற்றம் கொடுத்தனர். "தமிழ்ச் சொல்லிற்கெல்லாம் வடநூலே தாயாகி திகழ்கின்றமையின் அங்குள்ள வழக்கெல்லாம் தமிழுக்கும் பெறும்" என வீர சோழியத்திற்கு உரை எழுதிய பெருந்தேவனார் துணிந்து எழுதினார். பின்னாளில் சிவஞான முனிவர் சிவஞான போத முதற் சூத்திர விருத்தியுரையில் 'வடமொழியுணர்ந்தார்க்கன்றித் தமிழியல் விளங்காது' என்றும் எழுதினார். வடமொழி தமிழ்ச் சமூகத்திற் செலுத்திய செல்வாக்கினால் பேச்சு மொழியிலும் வடசொற்கள் கலப்பதாயின. அதனைத் தொடர்ந்து எழுத்திலும் பேச்சிலும் மணிப்பிரவாள நடை தோன்றித் தமிழ் மொழியின் நிலையை கீழ்மைப்படுத்திற்று. தம் படைப்பில் எந்தளவிற்கு வடசொற் பயன்பாட்டைக் கூட்டமுடியுமோ அந்தளவிற்கு தமக்குப் பெருமை என்ற மன நிலை தமிழ்ப் புலவரிடம் காணப்பட்டது. இதற்கு காளமேகமோ அன்றி அருணகிரிநாதரோ விதி விலக்கன்று. இக்காலத்தில் தமிழ் மொழிக்கு இன்னுமொரு இழிநிலை ஏற்பட்டது. வடசொற்களைத் தமிழ்நிலைப் படுத்தி எழுதலாம் என தொல்காப்பியர் கூறிய இலக்கண மரபிற்கு மாறாக (எ+டு: த்ரவ்ம் = திரவம்) வடசொற்களின் தமிழ் வடிவத்தை கிரந்த எழுத்துக்காளல் எழுதும் ஒரு சிக்கலான நிலையும் ஏற்படுவதாயிற்று. இதனால் தமிழில் ஸ், ஜ, ஷ, முதலான கிரந்த எழுத்துக்களும் இடம்பெறலாயின.

18ம் நூற்றாண்டு வரையுள்ள தமிழகத்தில் முஸ்லீம்களின் ஆட்சி, தெலுங்கு மொழியாளராகிய விஜயநகர நாயக்க மன்னர்களின் ஆட்சி, அதனைத் தொடர்ந்து ஐராப்பியராட்சி, என்பன நிலவலாயின. அக்காலப் பகுதியிலே தெலுங்கு, கன்னடம், மராத்தி, இந்துஸ்தானி, அரபு, உருது, பாரசீகம், போர்த்துக்கேயம், பிரஞ்சு, ஆங்கிலம் முதலான மொழிகள் தமிழ் நாட்டில் தம் செல்வாக்கைப் பல்வேறு வழிகளில் செலுத்தின. மேலே குறிப்பிட்ட பிறமொழிச் சொற்கள் தமிழில் கலந்த போதிலும் அவை தமிழைப் பாதிக்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. ஏனெனில் அவை தமிழில் இல்லாத புதிய பொருட் பெயர்களாகவே வழங்கின. ஆனால் வடமொழித் திணிப்பாளர், தமிழ் இலக்கணத்தை வடமொழி இலக்கணம் என்றும், வடமொழிக்கு தமிழ் நிகராகாது: தமிழை அறிய வடமொழியையே கற்கவேண்டும் என்னும் கருத்துக்களை சமூகத்தில் நிலைபெறச் செய்தன. வீரசோழியம், பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து முதலான இலக்கண நூல்களும் சேனாவரையர், சிவஞான முனிவர் முதலான உரைகாரரும் தமிழ் மொழிக்கு இத்தகு இழி நிலயைக் கற்பிதம் செய்தனர்.

தமிழகத்திலும், ஈழத்திலும் ஆங்கிலேயர் ஆட்சி நிலவியபோது பிராமணர்களும் உயர் வகுப்பினரும் ஆங்கிலக் கல்வியிலும் அரச பதவிகளிலும் மேம்பட்டு விளங்கினர். இவர்களில் பார்ப்பனர் வடமொழியையே உயர் மொழியாகப் போற்றினர். அதேவேளை ஈழத்தில் சைவசமயக் கல்விப் பாரம்பரியத்தில் வந்தோர் தமிழையும் வடமொழியையும் ஒப்பு நோக்க ஆங்கிலக் கல்வியாளர் தமிழுக்கு முதன்மை அளிக்கவில்லை.

தமிழகம் வந்த ஐரோப்பிய அறிஞர்களான போப், கால்டுவெல், வின்சுலோ, பெர்சிவல் முதலானவர்கள் தமிழ்மொழி பற்றி ஆராய்ந்து வெளியிட்ட நூல்கள் வாயிலாக மொழி, இனம், வரலாறு பற்றிய உயர்ந்த கருத்துக்களை வெளியிட்டனர். கால்டுவெல் ஐயரின் "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" (1956) என்ற நூல் தமிழ் மொழியின் சிறப்பை உறுதிப்படுத்தியது.

> **2**
>
> **தமிழீழ விடுதலைப்புலிகளின் கலை பண்பாட்டுக் கழகத்தால் வெளியிடப்பட்ட 1992ம் ஆண்டு முத்தமிழ் விழா மலரில் இடம் பெற்ற கட்டுரையின் சென்ற இதழ் தொடர்ச்சி.**

திராவிடர் என்ற சிறப்புப் பெயரிட்டு அழைக்கப்பட்ட மக்கள், பார்ப்பனர்கள் தங்களிடையே வந்து வாழத் தொடங்குவதற்கு முற்பட்ட காலத்திலேயே நாகரீக வாழ்வில் அடியிட்டு இருந்தனர் என்பதில் சிறிதும் ஐயமில்லை என்றும் தமிழ் தன்னிடையே இடம் பெற்றிருக்கும் சமஸ்கிருதச் சொற்களை அறவே ஒழித்து விட்டு உயிர் வாழ்வதோடு அவற்றின் துணையை ஒரு சிறிதும் வேண்டாமல் வளம் பெற்று உயர்தலும் இயலும், என்று தெரிவித்த கருத்துக்கள் சமூக-அரசியல்-கல்வி நிலைப்பட்ட தமிழ் எண்ணவியலாரிடையே தனித் தமிழ் இயக்க உணர்வுகளை விரைவுபடுத்தின.

இக்காலத்தே இந்தியாவில் தோன்றிய விடுதலை இயக்கங்களும் தனித்தமிழ் இயக்கத்தினை விரைவுபடுத்தின. பாரத தேசியம் பேசிய பாரதியார் கூட தமிழின மேம்பாட்டையே அழுத்திப் பாடினார்.

19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இருந்து படிப்படியாகத் தனித்தமிழ் எண்ணக் கருத்துக்களும், எழுத்துக்களும் தமிழில் இடம்பெறலாயின. இப்பணியினை நடைமுறைப்படுத்தியோரில் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை (1855, 1897), பரிதிமாற்கலைஞர் (1870, 1903), பாம்பன் குமரகுருபரதாச சுவாமிகள் (1850, 1929), மறைமலை அடிகளார் (1879, 1950), நீலாம்பிகை அம்மையார்(-1903, 1945), சோமசுந்தர பாரதியார் (1879, 1959), இளவளகனார் (1904, 1921), சி. இலக்குவனார் (1910, 1921), தேவநேயப் பாவாணர், (1902-1981) முதலியோரது ஆக்கங்களும், செயற்பாடுகளும் குறிப்பிடத்தக்கவை. இந்நிலையில் 1916 இல் 'தனித்தமிழ் இயக்கம் ' அமைப்பு அடிப்படையில் தொடங்கப்பட்டது.

ஈழத்திலே மறைமலை அடிகளின் வருகை மூன்று தடவை இடம் பெற்றிருக்கின்றது. அத்துடன் தமிழகத்தில் இடம்பெற்ற தனித்தமிழ் இயக்க செயற்பாடுகளை பின்பற்றி அதனை ஈழத்தில் முன்னின்று நடாத்தியவர்களில் தா. அழகசுந்தரதேசிகர் (1873-1941), விபுலானந்த அடிகள் (1892-1947), சு. நவநீதகிருஸ்ண பாரதியார் (1889-1954), எம். பி தாம்பரனார் (1898-1972), பேராசிரியர் சு. கணபதிப்பிள்ளை (1903-1968) முதலியோர் தனித்தமிழ் இயக்கச் சார்பாளர்கள் எனலாம். தனித்தமிழ் இயக்கத்தை உணர்வு முறையிலும் செயற்பாட்டு அடிப்படையிலும் கொண்டு நடாத்திய இருபெரும் தலைவர்கள் மறைமலை அடிகளும், பாவாணரும் ஆவர். இவர்களது செயற்பாடுகளின் குறிக்கோள்களாக பின்வரும் பொருட்கூறுகள் அமைந்திருந்தன.

1. பிறமொழிச் சொற்களை இயன்றவரை எழுத்திலும் பேச்சிலும் தவிர்த்தல்.
2. பிறமொழிச் சொற்களுக்கு நிகரான பழந்தமிழ்ச் சொற்களை கண்டு பிடித்து வழங்கல்.
3. பிறமொழிச் சொற்களுக்கு தமிழில் புதுச்சொல்லாக்கல்.
4. தவிர்க்க முடியாதவிடத்து பிறமொழிச் சொற்களை தமிழ் மொழியின் இயல்புக்கமைய வழங்குதல்.
5. பிறமொழிகளில் உள்ள அறிவியல் நூல்களை தூய தமிழில் மொழி பெயர்த்தல்.
6. ஆட்பெயர், இடப்பெயர், பொருட்பெயர் முதலியவற்றுக்கு தூய தமிழ்ப் பெயரிடுதல்.
7. ஆக்க இலக்கியகாரரும் தனித்தமிழில் எழுத வேண்டும்.
8. தனித்தமிழ் இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றுதல்.

இத்தகு உயர்ந்த நோக்கங்கள் உடையதாக தனித்தமிழ் இயக்கம் தமிழகத்தில் அரைநூற்றாண்டு காலமாக நடைபெற்று வந்த போதிலும், சமூக அரசியல் காரணிகளால் அம்முயற்சி அங்கு வெற்றி பெறவில்லை என்பதையும், மாறாக தமிழக எழுத்தும்,-பேச்சும் தனித்தமிழ் என்ற நேர் கோட்டினின்றும் மாறுபட்டு திசைமாறிப் போயிருப்பதையும் கண்கூடாகக் காணலாம்.

## மொழித் தூய்மையாக்கமும் சிக்கல்களும்:

காலம் காலமாகத் தமிழில் கலந்து கொண்ட வடமொழிச் சொற்களை அகற்றிவிட்டு, அவற்றுக்குப் பதிலாகத் தூய தமிழ்ச் சொற்களை ஆக்கிக் கொள்வதில் பெரும் இடர்பாடுண்டு என சலிப்போரும் உளர். அதுபோன்ற அறிவியலின் பேரால் வழங்கி வரும் பிறமொழிச் செற்களுக்கு எவ்வாறு தமிழில் சொல்லாக்கம் காணமுடியுமென ஏங்குவாரும் உளர். "தமிழ் இலக்சிக்கன்" என்ற பெயரிலுள்ள ஏழு பெரும் தொகுதிகளிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிறமொழிச் சொற்கள் இருப்பதை அறிவோம். அவற்றுக்குரிய தமிழ்ச் சொற்களை பழந்தமிழ் இலக்கியங்களின் ஊடாக கண்டு பிடித்தோம். இச்சொற்களை எழுத்திலும், பேச்சிலும் கொண்டுவர வேண்டிய பொறுப்பு எழுத்தாளருக்கும், மக்களுக்கும் உரியதாகும். பழந்தமிழ் இலக்கிய நூலார் தமிழ்ச் சொற்களைக் கைவிட்டு வடசொற்களையே விரும்பிக் கையாண்டு வந்தமையால் ஏற்பட்ட வரலாற்றுத் தவறுகளின் விளைவே, வடசொல் மேலாண்மை தமிழில் ஏற்படுவதற்குரிய முதற்காரணமாகும்.

நமது மொழியில் வழங்கி வரும் உருது, பாரசீகம், ஐரோப்பிய மொழிகள் ஆகிய மொழிச் சொற்களுக்குத் தமிழ்ச் சொல்லாக்கம் செய்வதில் இடர்பாடுகள் உண்டு. அறிவியல் தந்த பிறமொழிச் சொற்களை தமிழில், கலைச் சொல்லாக்கம் செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு கலைச்சொல்லாக்கம் செய்ய முடியாதவிடத்து பிறமொழிச் சொற்களை தேவை கருதி அப்படியே தமிழில் வழங்குதல் தவறன்று. அறிவியல் சார்ந்த சொற்களைத் தமிழாக்கம் செய்யலாம் என்பதற்கு 1936 இல் சென்னையில் விபுலானந்தர் தலைமையில் நடைபெற்ற கலைச் சொல்லாக்க மாநாடும், 1938 இல் வெளிவந்த "தமிழ் கலைச் சொற்கள்" என்ற நூலும், பின்னாளில் ஈழத்தில் வெளிவந்துள்ள கலைச் சொற்றொகுதிகளும் சான்றாகின்றன. இதுவரை வெளிவந்த கலைச் சொற்றொகுதிகளில் வடமொழி மேலாண்மை இருத்தலைச் சுட்டிக்காட்டுவதன் மூலம் இனிமேல் நடைபெறும் கலைச்சொல்லாக்கம் தூய தமிழில் அமைய வேண்டுமென்பதை ஒப்புக்கொண்டு, எமது மொழியை வளம் படுத்த இத்துறைவல்லார் முன்வர வேண்டும்.

## மொழி பெயர்ப்பு;

தமிழ் மொழி பல துறைகளிலும் வளம்பெற வேண்டுமாயின் வேற்று மொழிகளிலுள்ள நல்ல நூல்களை தமிழில் மொழி பெயர்த்து வழங்க வேண்டும். ஒரு மொழியில் உள்ள ஆக்கங்களை இன்னொரு மொழியில் மொழி பெயர்க்கும் போது இரு மொழிகளின்தும் இலக்கண மரபுகளோடு பண்பாட்டு பின்னணிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். தமிழில் வழங்கிய வடசொற்களுக்கு இலக்கணம் கூற வந்த நன்னூலார் தற்பவம், தற்சமம் என்னும் இரு சொற்களைக் கையாண்டார். வடமொழிச் சொற்களை தமிழில் எழுதக் கூடியதாக இருந்தால் அதனை தற்பவம் என்றும், அவ்வாறு தமிழ் எழுத்தில் எழுத முடியாத சொற்களை தமிழ்ப் படுத்தி எழுதின் தற்சமம் என்றார். இதனை ஒலி பெயர்ப்பு (Transliteration) எனலாம். பிறமொழிச் சொற்களுக்கு தமிழில் கலைச் சொல் ஆக்கமுடியாத போது, அச்சொற்களை ஒலிபெயர்ப்பு அடிப்படையில் வழங்குதல் தவறில்லை. விஞ்ஞான வளர்ச்சியும், தொழில் நுட்ப வளர்ச்சியின் உற்பத்திப் பெருக்கமும் பிறமொழிகளில் புதுப்புதுச் சொற்களின் தோற்றத்தையும் பெருக்கியுள்ளன. இத்தகைய சொற்களை தமிழில் மொழி பெயர்க்கும் போது, தவிர்க்க முடியாதவிடத்து ஒலி பெயர்ப்பாக முதலில் மொழி பெயர்த்து வழங்கலாம். அச்சொற்கள் மக்களிடையே பழக்கப் பட்ட பின்னர் அவற்றுக்குத் தனித்தமிழ்ச் சொல்லாக்கம் காலப்போக்கில் ஏற்படுத்திக் கொள்வதும் ஒரு முறையாகலாம். மொழி பெயர்ப்பு தொடர்பாக விபுலானந்த அடிகளார் கூறும் கருத்தும் ஒரே வழி ஈண்டு பொருந்துகிறது.

"தமிழில் மொழி பெயர்ப்பு நூல் எழுத முன்வருபவர் சிலர், நிரம்பிய தமிழ் அறிவின்மையால் ஆங்கில மக்களும் தமிழ் மக்களும் ஒருங்கு வெறுக்கத் தக்க பயற்றுப் பச்சரிசி நடையில் (மைந்தமிழும் வெள்ளையர் ஆங்கிலமும் சரிக்குச்சரி கலந்த நடையை பயற்றுப் பச்சரிசி நடை என்றாம், மணிப்பிரவாளம் என்றாற் போல) நூல் எழுதி முடிக்கின்றார்கள். இவ்வாறெழுந்த நூல்களால் விளையும் பயன் ஒன்றுமில்லை. ஒரே ஒரு வழி அயல் நாட்டு சொற்களைச் சேர்த்து கொள்ளுவதனால் குற்றம் இல்லை. முடிந்த நூல் தமிழ்மணங் கமழ்வதாக இருத்தல் வேண்டும். அல்லாவிடில் நின்று நிலவாது."

பிற மொழிகளில் உள்ள ஆக்க இலக்கியங்களை தமிழில் மொழி பெயர்க்கும் போது குறிப்பாக பெயர்ச் சொற்கள், இடப்பெயர்கள், பொருட் பெயர்கள், பண்பாட்டு விழுமியச் சொற்கள் முதலியவற்றைத் தனித்தமிழில் மொழி பெயர்த்தலில் இடர்பாடுண்டு. ஒரு பண்பாட்டுச் சூழலை வெளிப்படுத்தும் இலக்கியத்தை இன்னொரு பண்பாட்டு சூழலைக் கொண்ட மொழிக்குக் கொண்டு வரும் போதே இந்த இடர்பாடு ஏற்படுகிறது. அறிவியல் நூல்களை மொழி பெயர்க்கும் போது இதற்குத்தடை இல்லை.

## தனித்தமிழ் வழக்குகள்

எழுத்து வழக்கு, பேச்சு வழக்கு ஆகிய இரண்டிலும் எழுத்து வழக்கில் தனித்தமிழ் நடையைப் பேணும் வாய்ப்பு மிகுதியாகும். ஏனெனில், ஒருவர் தாம் எழுதியதை மீண்டும் திருத்திக் கொள்ள வாய்ப்பு உண்டு. ஆனால் பேச்சு வழக்கில் இவ் வாய்ப்புக்கு இடம் இல்லை. உரையாடுவோர் தம் கருத்துக்களையும், உணர்வுகளையும் மற்றவருக்கு உடனுக்குடன் வெளிப்படுத்தும்போது, தூய தமிழில் பேசவேண்டும் என்ற உணர்விருந்த போதிலும் அது முழுமையாகக் கைகூடுவதில்லை.

# பொங்கியெழுந்தது உலகத்தமிழினம் பொல்லா இந்தியச் செயலைக்கண்டித்தே



நள்ளிரவில் மெழுகுவர்த்தி போராட்டம் - இலண்டன் இந்தியத் தூதரகம் முன்பாக






தமிழ் மகளிர் - சிறுவர்கள் - பெரியோர் - சிறியோர் அனைவரும் இலண்டன் ஊர்வலத்தில்




இலண்டன் இந்தியத் தூதரக நுழை வாயிலில் மறிய லிட்டு கண்டனம்

ஓ ! கிட்டண்ணாவே !
எம் நெஞ்சில் நின்று...
எரிகின்றாய் இன்று !

உன்னை ...
மறக்கமாட்டோம்!
நீ...
எம்மோடு இருப்பாய்!
எம் மண்ணோடு இருப்பாய்

புனித நீர்த்துளியாய்...
எம் பூமியை நனைக்கும்...
அந்த மனித தேவர்களோடு...
மாவீரர்களோடு...
நீயும்...
இணைந்து சிரிப்பாய்!

நீ விட்டுச்சென்ற...
உன் கனவுகள்...
உன் நினைவுகள் அனைத்தும்
உயிர் பெறும் ஓர் நாள்!
அந்த நாள் வரை...
நாம்...
உன் பயணத்தைத் தொடர்வோம் !

ஜேர்மன் நகரில் தளபதியின் நினைவில் திரண்ட மக்களின் ஒரு பகுதி





# குமுறும் தமிழ் நெஞ்சங்கள் தான்

அனைத்து தமிழ் உலகும் விழித்தெழ வைத்த வீரமகன் கேர்ணல் கிட்டுவினதும், வ
உலகெல்லாம் துயருருவாயினர். அவர்களால் வெளியிடப்பட்ட கவிதாஞ்சலிகள், துண்

## வீர அஞ்சலி

**திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் (தளபதி கிட்டு)**

முன்னாள்யாழ்பிராந்தியத்தளபதி,சர்வதேசப்பொறுப்பாளர்

ஜனனம்
02-01-1960



வீரமரணம்
16-01-1993

மக்களின் மனதினிலே மாவிரனாய்
... தப்பூக்களாய்.

களங்கள் பல கண்ட – நீ
வென்றெடுத்த வேள்விகள் எத்தனையோ
அத்தனையும் நிக்குதே மனதினிலே
மறந்து போகுமோ தமிழ்ஈழமே

தாய்மொழிக்காக கல்வி துறந்தாய்
தாய் நாட்டுக்காக உயிர் துறந்தாய்
காலன் வந்துஉனை அணைத்தான்
கலங்கியே கதறித் துடித்தோம்

இத்தனை நடந்த பின்பும்
சாந்தி அடையுமோ எம்மனம்
பெற்றவளின் அன்பிலே வளர்ந்து
மக்களின் மனதிலே நிளைத்தாய்
கண்ணீர்ப் பூக்களாம் எம்மனதை
உமது காலடியில் சமர்ப்பிக்கிறோம்

பிரிவுத்துயரால் வாடும்
குடும்பத்தினர்



மெல்ல மெல்ல அந்தச் செய்தி
காட்டுத் தீயாய்
நிலைகளைச் சுட்டு
நெஞ்சைப் பிசைந்தது.

ஒரு தெருப்பு மல்லிகை
ஒன்பது மொட்டுக்களுடன்
கந்தகத் தீயில் கருகிப் போனதாம்.

நம்ப மறுக்கின்ற
ஏழை மனது
இன்னும் நப்பாசையுடன்
அந்தச் செய்தி மட்டும்
பொய்யாகக் கூடாதாவென்று.

தளறுகள் செய்கையில்
கண்டித்துத் திருத்தி
தந்தையாய் ஆனதும்...
செய்வன
அன்பால் அணைத்து
அன்னையாய் ஆனதும்...
மனம் வாடி
உடல் சோர்ந்து போகையில்
வார்த்தைகளால் ஒத்தடம் தந்து
வைத்தியனாய் ஆனதும்...

கடந்த கால நினைவில்
சஞ்சரிக்கும் மனது
கொடுமையான – அந்த
நிகழ்வை மட்டும்
நிராகரிக்க மறுக்கின்றது.

அடிக்கடி உந்தன்
உதடுகளில் உச்சரிப்பு
இன்றும்
சரம் காணாமல்
செவிகளில் ஒலிக்கிறது.

அதனால்தான், அழுவதில்
எங்களுக்கும்
உங்களுக்குந்தான் இடைவில்லை.

வீரச்சாவடைந்த எமது தலைவர்கள்
தளபதி கேர்ணல் கிட்டு
...

"போராளியின் மரணம்
வாழ்வின் முடிவல்ல"

தளபதி கேர்ணல் கிட்டு

## வீர அஞ்சலி

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் யாழ் பிராந்...
மத்திய குழு உறுப்பினரும், சர்வதேசப் பொறுப்...

**தளபதி கிட்டு**
(சதாசிவம் கிருஷ்ணகுமார்)

அன்னையின் மடியில்
02. 01. 1960

அலை...

**கிட்டண்ணா!**

மண்ணையும் மக்களையும் நேசித்த
மாமனிதர் நீங்கள்!

மூச்சுக்கு மூச்சு
"தமிழீழம்... தமிழீழம்" என்றே
உச்சரித்துக் கொண்டிருந்தவர் நீங்கள்

காந்தியின் கைத்தடி
மீண்டும் ஒருமுறை
தவறிப் போனதால்
கடலோடு கடலாய்
காற்றோடு காற்றாய்
பிரபஞ்ச அதிர்வில்
கலந்து போனீர்கள்!



நம்ப மறுத்து
நெஞ்சு கனக்கிறது
உங்களின் ஈகத்தில்
எழுவோம்! நாங்கள் எழுவே...
உங்களின் கனவு மெய்ப்பட

இவருடன் சங்கமமாகிய அனைத்துப் போராளி...
வீர வணக்கத்தை செலுத்துகிறோ...

இலண்டன் LEWISHAM வாழ்...

## வீர வணக்கம்



தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் யாழ் பிராந்தியத் தளபதியும்,
மத்திய குழு உறுப்பினரும், சர்வதேசப் பொறுப்பாளருமான

**கேணல் கிட்டு**
(சதாசிவம் கிருஷ்ணகுமார்)

அன்னையின் மடியில்
02. 01. 1960

எம் தலைவா !
தமிழீழ மண்மீது மாற்றான்
கால் படாது
தடுத்த மாவீரரே!
உம் பாதத்தில் தாழ் பணிந்து
அஞ்சலித்தோம் !

அலைகடலின் சங்கமத்தில்
16. 01. 1993

தாயகத்தின் அமைதிக்காய்
நெடும் பயணம் செல்கையிலே
மறித்திட்ட கடற்கொள்ளை
இந்தியரால் இன்னுயிர் இழந்திட்ட
எம் தலைவா துயரத்தால்
நாம் துடிக்கின்றோம் !

வீர வணக்கம் கூறுகிறோம்
தமிழர் தலைவர் சதாசிவம்
கிருஷ்ணகுமார் அவர்கட்கும்
உடன் உயிர் நீத்த அனைவர்க்கும் !

லண்டன் வாழ் கோலாவில் மக்கள் சார்பில்
கோலாவில் Welfare Group - ( தென் தமிழீழம் )

## வீர அஞ்சலி



அந்நியன் உந்தன் உயிர் தின்றானோ
ஆழ் கடல் தன்னில் உனை அழித்தானோ
வெந்து துடிக்குது எமுடல் ஆவி
வீர வேங்கையே! உம் புகழ் வாழி!

கிட்டென உனையும் அழைத்திட நின்றாய்
தீரமாய் போரிலே திறம்பட வைத்தாய்
பட்டதேன் உன்னுடல் நடுக்கடல் தன்னில்
பாவிகள் குடித்ததேன் உன்னுயிர் தன்னை

யாழ் தளம் தன்னில் தளபதியானாய்
புலிகளின் வீரம் போற்றிட நின்றாய்
இந்தியன் உந்தன் உயிர்தனைப் பிடுங்கி
எம்மினப் போரை அழித்தொழிப்பானோ?

வேங்கைகள் கண்ணீர் சிந்துவதில்லை
வீரர்கள் மண்ணிலே சாவதுமில்லை
பொங்குகடலிலே சிந்திய குருதி
போற்றும் எம்மீழம் பெறுக நீர் சாந்தி

கண்ணீர்க் கடலிலே இறைவனை வேண்டி
கரங்கள் குவித்தோம் கொடுஎனச் சாந்தி
எண்ணிய தங்கள் இலட்சியம் வாழும்
இலங்கையில் ஈழம் நிச்சயம் ஆகும் .

இந்தியக் கூலிப் படைகளினால் பொதுக்கடல் பிராந்தியத்தில் அழிக்கப்பட்ட அனைத்துப் போராளிகளுக்கும் எமது வீர அஞ்சலிகள்.
— சுவிஸ், இலண்டன் வாழ் சிறுப்பிட்டி மக்கள்

## சத்தியம் செய்...

கண்ணீர் சிந்தாதீர்கள்
அதற்கு இது நேரமல்ல
சத்தமிட்டுச் சொல்லுங்கள்
தளபதி இறக்கவில்லை என்
சத்தியம் செய்யுங்கள்
அவர்கள் இலட்சியம் வெல்லு...

## தியாக தீபங்களு... எமது அஞ்ச...



நம்ப முடியவில்லையே!
எவரையும் இலகுவில்
உன்னருகே ஈர்க்கும்
வல்லமையுள்ள உன்னால்
எப்படியந்த
இந்தியப் படையினை
ஈர்க்க முடி...

மு...
கா...
கடை...

காலைத் தொட்ட...

இலங்கை ராணுவம் கூட
உனை நன்கு
புரிந்து கொண்டது
இவையெல்லாம் நாமறிவோம்
ஆனால்...
ஏனிந்த இந்தியப்படையால்
மட்டும்
உனை புரிய முடியவில்லை!

விடுதலையை விளங்காததுவா...
மொழி வேறுபாடா...
இல்லை
கொலை வெறியா...
எது!
ஓ. இப்போது புரிகிறது!
தமிழீழத்தில் நின்றுகொண்டு
பாகிஸ்தானில் புலிகளுக்கென்ன
வேலையெனக் கேட்டு
வளைவிட்டவர்களெல்லவா!
என்ன செய்கிறோம்
ஏது செய்கிறோம்
என்றெதுவும் புரியாத
அந்த மடங்களுக்கு
உனை புரிய
நியாயமில்லை

- குப்பிழான் மக்கள் -

## தமிழ் வர்த்தகர்கள் அஞ்சலி



தளபதி கிட்டு

தமிழீழத் தேசியத் தலைவரின்
துணைவன்
செயலால் வரலாறு படைத்த
தலைவன்
வீறு கொண்டெழு விடுதலை
உணர்வின் திருவுரு
தமிழர் உள்ளவரை உடன்வாழும்
உன் நினைவு

இவருடன் வீரமரணத்தை தழுவிக்கொண்ட
ஏனைய ஒன்பது விடுதலை வீரர்களையும்
அஞ்சலிக்கின்றோம்

தமிழ் வர்த்தகர் சங்கம் - இலண்டன்

"எமது தலைவர் பிரபாகரன் முதல் இயக்கத்தின் கடைசிப் போராளி வரை நமது வாழ்வு நிரந்தரம் என்று எண்ணிக் கொண்டு போர்க் களத்தில் குதிக்கவில்லை. எமது வாழ்வு நிச்சயமற்றது. இந்த நிலையில் எமக்குப் பதவி ஆசை எப்படி ஏற்பட முடியும்? அடுத்தவருக்கு கழுத்தறுப்புச் செய்யவோ, அண்டல் போடவோ, அராஜகச் செயலில் ஈடுபடவேண்டிய அவசியமோ எமக்குத் துளியும் கிடையாது.

எமது தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த பத்தாண்டு கால வரலாற்றைப் படைத்தது. நாம் தமிழ்ழ நாட்டை மீட்பதற்கே ஆயுதமேந்தியுள்ளோம். எனவே விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை தமிழீழ இலட்சியத்தைக் கைவிடவோ, சரணாகதியடையவோநாம் என்றைக்கும் தயாராக இல்லை. மானமுள்ள மக்கள் மாற்றானிடம் ஒருபோதும் சரணாகதியடைய மாட்டார்கள்."

- யாழ் மாவட்ட விடுதலைப் புலிகளின்
தளபதி கிட்டு
(ஈழ முரசு 27-01-87)

# எத்தனை எத்தனை!!!

...விடுதலைப்போராளிகள் ஒன்பது பேரதும் தற்கொடை செய்தியால் தமிழர் அனைவரும் ...பிரசுரங்களில் உரிய காலத்துள் எமக்கு கிடைத்த சில இங்கு தொகுப்பாகின்றது.

## வீரவணக்கம்

### –தளபதி கேர்ணல் கிட்டு–

வீரச்சாவு: 16-01-1993



தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் மூத்த தலைவர்களில் ஒருவரான தளபதி கிட்டு, இந்திய அரசின் கோரச் சதியால் 16.01.1993 இல் வீரச் சாவைத் தழுவிக்கொண்டார்.

போர்க்களத்தில் வீரத்தளபதியாய், மதிநுட்பம் வாய்ந்த போர்த்தந்திரியாய், அரசியல் நுணுக்கம் அறிந்தவராய், அஞ்சா நெஞ்சனாய், சிறந்த நிர்வாகியாய், சித்திரக்கலைஞனாய்....

பிறந்த மண்ணின் தேசத்தின் விடுதலைக்காகப் போராடிய ஒரு தீப்பிழம்பு தீயினில் கலந்தது.

கபடம், நயவஞ்சகம், சூழ்ச்சி, பேடித்தனம், சதி இன்னும் பிற அவலட்சணங்களை தன்னகத்தே கொண்ட இந்தியா, தனது தலைக்கு மேலும் ஒரு அவமானக் கிரீடத்தைச் சூடிக்கொண்டது.

திலீபன், குமரப்பா, புலேந்திரன், ஜோனி, பூபதிஅம்மா, வரிசையில் இந்திய அரசு தனது வெறித்தனமான சதிப் பசிக்கு தளபதி கிட்டுவையும் பலிவாங்கிக் கொண்டது.


சர்வதேச நாடுகளின் சமாதான யோசனைகளைக் காவியவராய் தமிழீழம் நோக்கிச் சென்ற தளபதி கிட்டுவை, அவர் சென்ற கப்பலுடன், சமாதானத்தின், அமைதியின் விரோதியான இந்திய அரசின் கடற்படை, சர்வதேசக்கடலில் வைத்து சுற்றிவளைத்தது. இந்திய கடல் எல்லைக்குள் கப்பல் கொண்டு செல்லப்பட்டது.... யாவும் இந்திய அரசு எதிர்பார்த்தபடியே நிகழ்ந்துவிட்டது!

ஆனால் தமிழீழ மக்கள் எதிர்பார்த்திராதது நடந்துவிட்டது. வீரகாவியம்தான்! என்றாலும் சோகம் கவ்விக்கொண்டது.

தளபதி கிட்டுவும், மேலும் 9 பேரும் –
கோரத்தீயில், ஆழ்கடலில், முகம் காற்றுப் பெருவெளியில்
கலந்துவிட்டனர்.
எங்கள் தேசம் சிலிர்த்துக் கொண்டது! எங்கள் தளபதி
எங்கே–?

நிடிக்குபோல் உட்காரும் சனம் படைத்தவர்களல்லர்;
மிளிர்ந்து வாழ் என்று வீரம் படைத்தவர்கள்!
தமிழீழம் பொறு! அவர் தம் புனித நினைவுடன் எதிரியின் பாசறை நோக்கி
நம் எல்லைகளை மீட்டுவோம்!

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்
தமிழீழ விடுதலைப் புலிகள் - பிரித்தானியக் கிளை




தேசிய வீரனுக்கு இதய அஞ்சலி

## வீர வணக்கம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் யாழ் பிராந்தியத் தளபதியும், மத்திய குழு உறுப்பினரும், சர்வதேசப் பொறுப்பாளருமான

### தளபதிகிட்டு

(சதாசிவம் கிருஷ்ணகுமார்)

| | |
|---|---|
| வீரஜனனம் 02. 01. 1960 | வீரமரணம் 16. 01. 1993 |

விடுதலை என்பது மூச்சுடரென்றாய்!
அரசியல் விடுதலை தளபதியானாய்.
பொருளியல் விடுதலை வித்துமானாய்.
பெண்ணின விடுதலைக் கருத்துமானாய்!



மறைந்தும் மறையா மாபெரும் தலைவனே
மண்மீட்புப் பணிக்காய் மரணித்த வீரனே!
வல்வெட்டித் துறையின் வீர விளக்கே!
அமைதி வழி காணச் சென்றாய் நெடும் பயணமதில்.
வழிமறி இந்தியக்கயவரால் வீரகாவியம் ஆயினையோ!
கிட்டண்ணாவே!
உம் பிரிவு தாங்காமல் நெஞ்சுருகி நிற்கின்றோம்.
ஆனாலும்!
உறுதிக்கு உறைவிடமாய் நீரேயாகி
விடுதலையின் விரைவாய் திகழ்கின்றீர்!

அண்ணனின் பாதையே உம்பாதை என்ற
உங்கள் பாதையே எம்பாதையாக
உறுதியுடன் நடப்போம் எந்நாளுமே!
வீரவணக்கம் செலுத்துகிறோம் நாமும்
கிட்டண்ணாக்கும்
உடன் உயிர் துறந்த அனைவர்க்குமே
இருகரம் கூப்பி!

தமிழீழ விடுதலைப் புலிகள் மகளிர் அ...
பிரித்தானியக்கிளை.

## என்றும் வாழ்வாய்!

தலைவன் விழியில்....
தமிழீழத் தொட்டிலிலே ....
நிலையாக நீ வாழ்வாய்!
நித்தியமாய் எம்மக்கள்
கலையாய் கவிதையாய்க்
காவியமாய்ச் சத்தியத்தின்
மலையாய் நீ வாழ்வாய்!
மாவீரனே வாழி!
எல்லை கடந்து
எதிர்கொண்டு உன்னைக்
கொல்லத் துணிந்ததோ
கொடிய இந்தியம் !
கல்லைக் குடைந்து
கனி எடுப்பாரன்றோ
விச வில்லையெடுத்து
மாவீரனானாய் நீ ?
இல்லை உனக்கு அழிவு
தமிழீழ மக்கள் உள்ளவரை
விடுதலைத் தெய்வம் நீ !



தமிழீழ விடுதலைப்புலிகளின் மத்தியகுழு உறுப்பினரும் முன்னாள் யாழ். பிராந்தியத் தளபதியும் சர்வதேசச் செயலக பொறுப்பாளருமான

### தளபதி கிட்டு

(சதாசிவம் கிருஷ்ணகுமார்)

02.01.1960 – 16.01.1993

தளபதியே
எங்கள் தேச சரித்திரத்தின்
சிற்பியே
நேற்றுவரை எங்கள்
தாய் நிலத்தில்
எதிரியோடு போரிட்ட
வீரனே
இந்திய சதி கபளீகரம்
செய்த எங்கள் கிட்டண்ணாவே

தேசம் மீற
எதிரியின் முகாம் நோக்கி
நீங்கள் படைநடத்திய
நினைவுகள்
நெஞ்சை விட்டு அகல மறுக்கிறது
எதிரிகளைக் கடந்து செல்வோம்!
கடலின் மீது நீங்கள் நடத்திய
துரோகங்களைத் தாண்டி
நாங்கள் நிமிர்ந்து
வரலாறு நேற்றும் நடந்தது
நாளையும் நடக்கும்!

தளபதி கிட்டுவிற்கும் உடன் உயிர் நீத்தோருக்கும்
எமது இதய அஞ்சலி

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பேர்கன் நோர்வே




## மக்களுக்காகவே

தொடர்ந்தும் நாம் மக்களுக்காகப் போராடுகின்றோம். மக்களுக்காக நாம் போராடவில்லையெனில், எமது முகாமைச் சுற்றி பாதுகாப்புச் செய்தால் போதுமானது. நாம் மக்களுக்காகப் போராடுகின்றோம், மக்களுக்காகப் போராடுவதால் இராணுவ முகாம்களைச் சுற்றிக் காவல் புரிகின்றோம். இக்காவல் நேரத்தில் எமது உயிர்களைப் பணயம் வைத்தே போராடுகின்றோம்.

நெல்லியடியில் கேணல் கிட்டு 1986ல் கூறியது

# அத்தனையும் கிட்டண்ணாவின் நினைவாக!!!

நம்ப மறுத்து
நெஞ்சு கனக்கிறது
எழுவோம் ! நாங்கள் எழுவோம் !
உங்களின் கனவு மெய்ப்பட எழுவோம் !

## வீர வணக்கம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் யாழ் பிராந்தியத் தளபதியும், மத்திய குழு உறுப்பினரும், சர்வதேசப் பொறுப்பாளருமான

### தளபதிகிட்டு

(சதாசிவம் கிருஷ்ணகுமார்)

வீரஜனனம் 02. 01. 1960

வீரமரணம் 16. 01. 1993

மண்மீட்புப் போரின்
மகத்தான கதாநாயகன்!
இருநாட்டு ஆக்கிரமிப்பாளரை
புறங்கண்ட தடந்தோள்கள்!
தாய் நாட்டு மக்களுக்கு வாழ்வளிக்க
புனர்வாழ்வு திட்டங்கள் தீட்டிய
சிந்தனையாளன் நம் தலைவன் கிட்டு!
பிற நாட்டு வாழ்விலும் அனுதினமும்
தாய் நாட்டு பணி செய்த பேராளன்
ஊருக்கு சென்று அமைதி ஏற்படுத்தவென
புறப்பட்ட நம் தலைவன் பாதையினை
வழிமறித்தார் இந்திய கடற்கொள்ளைக்காரர்.
அதன் விளைவாய் தமிழினத்தின் தலைவன்
சோதிமயமான தீயில் சங்கமித்த
காவியத்தை கேட்டே துடிக்கின்றோம்
ஏற்கின்றோம் உறுதிமொழி அவர் வழியில்
பணிசெய்வோமென்றே!



தலைவன் கிட்டுவுக்கும்
உடன் உயிர் நீத்தோருக்கும்
வீரவணக்கங்கள்

**வோல்தம் பொறஸ்ட் தமிழ்ச் சங்கம்**

## தலைவனுக்கு அஞ்சலி

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் யாழ் பிராந்தியத் தளபதியும், மத்திய குழு உறுப்பினரும், சர்வதேசப் பொறுப்பாளருமான

### தளபதிகேணல்கிட்டு

(சதாசிவம் கிருஷ்ணகுமார்)

வீரப்பிறப்பு 02. 01. 1960

வீரச்சாவு 16. 01. 1993



எம் நெஞ்சத்தில்
அவர் கிட்டண்ணா
எம் மண்மீட்பில்
அவர் தளபதி கிட்டு
எம் பார்வையில்
அவர் மதிப்பிற்குரியவர்
இன்று இந்திய
கடற் கொள்ளையால்
மாவீரராகிவிட்டார்
உயிர் நீத்தே!

மீளாத பழிசுமந்தார் இந்தியர்கள்
கேளாது விடமாட்டார் தமிழர்களும்
தாளாது கொடுமை செய்த கயவர்களை
சேராது இனங்காட்டிடுவோம் வாரீர்

வீர வணக்கம் செய்தோம்
கிட்டண்ணாவுக்கும் உடன்
உயிர்நீத்த ஏனையோருக்கும்
புலம் பெயர்ந்த தமிழர் நாம்!

நியூகாம் தமிழ் மக்கள் சார்பில்
NEWHAM TAMIL ORGANISATION

## வீர அஞ்சலி

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் யாழ் பிராந்தியத் தளபதியும், மத்திய குழு உறுப்பினரும், சர்வதேசப் பொறுப்பாளருமான

### தளபதி கிட்டு

(சதாசிவம் கிருஷ்ணகுமார்)

வீரப்பிறப்பு 02. 01. 1960

வீரமரணம் 16. 01. 1993

பொருளாதாரத் தடைவிட்டே
மக்களை வாட்டி வதைப்பதினால்
தமிழீழ மண்மீட்புப் போரினையே
திசை மாற்ற நினைத்திட்ட சிறீலங்கா
தடுமாற ஆக்கினார் கிட்டண்ணா
தமிழீழ ஆய்வு நிறுவனம்!

எத்தனை எத்தனை ஆய்வுகள்
நித்தமும் நித்தமும் மாற்றீடுகள்
சொந்தப் பொருளாதாரம் சிறக்கிறது
நிந்தனை வாழ்வும் உருமாறுவதால்
போர்க்காலச் சூழலில் மக்கள்
வாழ்ந்திடச் செய்வது - கிட்டண்ணா
தந்திட்ட தமிழீழ ஆய்வு நிறுவனமே!



கிட்டண்ணாவுக்கும்
உடன் உயிர் நீத்தோருக்கும்
வீரவணக்கங்கள்.

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்**
**இலண்டன் கிளை**

## வீர அஞ்சலி



வல்வை மடியில் 06-01-1960

நீர் மடியில் 16-01-1993

### திரு. சதாசிவம் கிருஷ்ணகுமார்
### (கேணல் கிட்டு)

**களம் பல கண்ட வீர வேங்கை கிட்டு அண்ணாவே!**

பொதுக்கடல் பிராந்தியத்தில் கப்பலில் சென்று கொண்டிருந்த எமது வீர வேங்கைகளை இந்தியக் கூலிப்படைகள் அழித்திருப்பதை நாம் ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. இந்தியாவின் இந்த அடாவடித்தனத்தை நாம் அனைவரும் ஒன்று கூடி நின்று கண்டிக்க வேண்டியது எங்கள் ஒவ்வொருவரினதும் கடமை.

அன்னை மடியில் பிறந்து தமிழர்களின் மனதில் நிறைந்த எங்கள் கிட்டண்ணாவே!
உங்களுடைய இழப்பு ஒவ்வொரு தமிழனதும் மனதில் ஏற்பட்ட இழப்பு ஆகும்.

**ஆர்ப்பாட்ட ஊர்வலம்**
சனி 23-01-93 பி. ப. 1. 30 மணி
Temple Place WC2 (Tube : Temple) இலிருந்து
Caden Centre Hall, Bidborough ST. WC1
(Tube : King's Cross) ———— வரை

உங்கள் இழப்பால் துயருறும் லண்டன் வாழ் வல்வை மக்கள்

## வீர அஞ்சலி

நிரு. சதாசிவம் கிருஷ்ணகுமார் (தளபதிகிட்டு)

முன்னாள் யாழ்மாவட்டத் தளபதி, சர்வதேசப் பொறுப்பாளர்

வல்வை மைந்தனே !
வான் சென்றாயோ........
பூமியை பிளந்த
புரட்சி பூவே
எங்கள் கிட்டண்ணா..........
வல்வை கண்டெடுத்த
வலம்புரி சங்கே
எங்கள் கிட்டப்பா...........
தேசம் தேடுகிறது
உன்னை
தேசம் தேடுகிறது........
விடியலை தோற்றுவித்த
விடிவெள்ளி நீ............
கனவுகளை கட்டிக் கொண்டு
கடலுக்குள் போனவரே...
வல்வை
அலைவந்து சொல்லுது
காவிய
கதை ஒன்று சொல்லுது.......
உரத்த குரலால் - சுதந்திர
உணர்ச்சியை
உசுப்பியவனே
விடுதலைப் பயணத்தில்
வீர வரலாறு நீ........
ஈழத்தின் தேடலில்
உன்
வீரச் சுவடுகள்
காவிய நாயகர்களை
மட்டுமல்ல
காலத்தையும் பிரசவிக்கும்
புது தேசத்தையும்
பிரசவிக்கும்.



வல்வை மடியில் 02 . 01 . 1960

அலை மடியில் 16 . 01 . 1993

இவருடன் தேசத்தின் தேடலில் வீரமரணமெய்திய அனைத்து போராளிகளுக்கும் வல்வைத் தாயின் வீர அஞ்சலிகள்.

- வல்வைத் தாய் -
(லண்டன் வாழ் வல்வை மக்கள்)

## வீர வணக்கம்

தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னாள் யாழ் பிராந்தியத் தளபதியும், மத்திய குழு உறுப்பினரும், சர்வதேசப் பொறுப்பாளருமான

### கேர்ணல் கிட்டு

(சதாசிவம் கிருஷ்ணகுமார்)

அன்னையின் மடியில் 02. 01. 1960

அலைகடலின் சங்கமத்தில் 16. 01. 1993

புலி போன்ற வீரமும்
மலை போன்ற உறுதியும்
புயல் போன்ற வேகமும்
கொண்ட எங்கள் கிட்டண்ணாவே

சமாதானத் தூதுவனாய்ச் சென்றீர்
சர்வதேசக் கடலினிலே
சதிகாரக் கும்பலின் சதியால் சங்கமமானீர்கள்

சென்றீர்கள் எங்கள் மண்ணிற்கு விளக்கேற்ற
துரோகத்தினாலும் வஞ்சகத்தினாலும்
நடுக்கடலில் தீப்பிழம்பாக எரிந்தீர்கள்.

உங்கள் கல்லறை முன் உறுதி கொள்கிறோம்
எங்கள் மண்ணில்
நாளை எரியும் சுதந்திர தீபம்



கேர்ணல் கிட்டுவுடன் வீரமரணம் அடைந்த சக போராளிகளான
லெப். கேர்ணல் குட்டி சிறி
மேஜர் வேலன் | கப்டன் நாயகன் | கப்டன் றொசான் கப்டன் ஜீவா
கப்டன் குணசீலன் | லெப். நல்லவன் | லெப். தூயவன் லெப். அமுதன்
ஆகியவர்களுக்கு எமது சிரந்தாழ்த்திய வீர வணக்கங்கள்

**மேர்டன் கல்லூரி தமிழ் மாணவர் அமைப்பு**

## அந்து சமுத்திரத்தில் ஆக்கிரமிப்பு இந்தியா!

### அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே!

இந்தியா என்னும் இந்துசமுத்திரச் சண்டியன் மீண்டும் எமது போராட்டத்தின் இறைமையின் மீது தனது மறைமுக ஆக்கிரமிப்பை மேற்கொண்டுள்ளது. தமிழீழப் போராட்டத்தை அழித்தொழிப்பதில் கங்கணம் கட்டி நிற்கும் இந்திய அரசின் அடாவடித்தனம் மீண்டும் ஒரு முறை எமது போராட்டத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருப்பதை நாம் அனுமதிக்கப்போகின்றோமா?

தமிழ் ஈழம் என்கின்ற தனி அரசை அமைக்கும் பொறுப்பும் கடமையும் தமிழ் பேசும் மக்களாகிய எங்களுக்கு மட்டுமே உண்டு தவிர அயல் நாட்டுக்காரனுக்கோ வெளிநாட்டு சக்திகளுக்கோ கிடையாது. தனது பலம் பொருந்திய இராணுவத்தை எமது சொந்த மண்ணுக்கு அனுப்பி அப்பாவிப் பொது மக்களின் உயிர்களை ஆயிரக்கணக்கில் பலிவாங்கி நூற்றுக் கணக்கான பெண்களை பாலியல்வன்முறைக்குள்ளாக்கி தனது எண்ணத்தைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாமல் தோல்வியுடன் திரும்பிய ராஜீவ் தலைமையிலான இந்தியா தற்போது நரசிம்மராவ் தலைமையில் தனது நரிபாரை எமது போராளிகளின் மீது காட்டியிருப்பது உலகளவில் கண்டிக்கப்படவேண்டியது. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியா குத்தகைக்கு எடுத்து நடத்தும் சர்வதேச விதிகளை மீறும் செயற்பாடுகள் வெறுமனே புலிகளுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அல்ல. தமிழீழம் என்னும் தனி நாடு பாக்கு நீரிணையில் அமைவதை ஜீரணிக்க முடியாத இந்திய அரசு எமது போராட்டத்தை வேரோடு பிடுங்கி எறிவதற்காக காலாகாலமாக எடுத்து வரும் நடவடிக்கைகளில் ஒன்றே அண்மையில் விடுதலைப்புலிகள் அமைப்பின் முன்னைநாள் யாழ்பிராந்திய தளபதி கிட்டு உட்பட மேலும் பல உறுப்பினர்கள் மீது பொதுக் கடற்பிராந்தியத்தில் நடாத்திய அந்து மீறல் கொலை வெறி நாடகமாகும்.

### அன்பார்ந்த தமிழ் பேசும் மக்களே!

எமது போராட்டத்தை அழிக்க நினைக்கும் இந்தியாவின் செயலைக் கண்டிக்க சனிக்கிழமை நடக்க இருக்கும் ஊர்வலத்திற்கு உங்கள் ஒருமித்த ஒத்துழைப்பைத் தாருங்கள். இந்தியாவின் காட்டுமிராண்டித் தனத்தை கண்டிக்க இது போலும் செயல்கள் எதிர் காலத்தில் நடக்காது இருக்க நாம் அனைவரும் பேதம் மறந்து ஊர்வலத்தில் கலந்து கொள்வது வரலாற்றுக் கட்டாயம் என்று எண்ணுகின்றோம்.

**உயிரிழந்த அனைத்துப் போராளிகளுக்கும்**
**எமது கண்ணீர் அஞ்சலிகள்**

ஈழபூமி வெளியீட்டகம்.

# அடுத்தது என்ன?

தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று பிரமிக்கத் தக்க வளர்ச்சியைக் கண்டு நிற்கிறது. யார் மீதும் தங்கியிராது எமது சொந்தக் காலில் -சுயபலத்தில் நின்று, நிலை தளராத உறுதியுடன் விடுதலைக்காகப் போராடுகிறது.

தலைவர் பிரபாகரனின் தலைமையில் - தமிழீழத்தின் விடுதலைச் சேனையாகிய புலிப்படை, உலகமே வியக்கத்தக்க ஒரு சிறந்த படையாக இன்று வளர்ந்து நிற்கின்றது.

ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகளது உயிர்த்தியாகத்தால், இந்த உன்னத வளர்ச்சி எட்டப்பட்டிருக்கின்றது.

ஆயிரத்தி தொளாயிரத்து எண்பதுகள் - இற்றைக்குப் பன்னிரண்டு வருடங்களுக்கு முன் புலிப்படை பற்றி மக்கள் கேள்விப் பட்டிருந்தார்கள். ஆயினும் 'நாலு பேர் இருந்து என்னத்தைச் சாதிக்கப் போகிறார்கள்' என்ற கேள்வியே மக்களிடம் இருந்தது. ஓர் ஆயுதப் போராட்டம் பற்றி -அதனது வெற்றி பற்றி கற்பனை செய்து பார்க்கும் நிலையில் கூட, அன்று மிகப் பெரும்பாலான எமது மக்கள் இருக்கவில்லை. 'நாலு துவக்கை வைத்துக் கொண்டு ஒரு நாட்டின் படையை எதிர்த்து எப்படிப் போராடுகிறது' என, அவநம்பிக்கை அடைந்திருந்தார்கள்.

1983 இல் திருநெல்வேலியில் 13 சிங்கள இராணுவம் கொல்லப்பட்டு அவர்களது துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்ட செய்தி கேட்டு, மக்கள் அதிர்ச்சியுற்றார்கள் - ஆச்சரியப்பட்டார்கள். 'பெடியள் செய்திட்டாங்கள்' என்று வியந்தனர். புலிகளின் கண்ணிகள் தொடர்ந்து வெடித்தன. படை வண்டிகள் நொருங்கின. எனினும் மக்களின் நம்பிக்கையீனங்கள் நொருங்கவில்லை.

விடுதலைப் போர் தீவிரமாகியது. ரோந்து அணிகள் சிதறின; காவல்துறை நிலையங்கள் வீழ்ந்தன. எஞ்சியவை சூரியனைக்கண்ட பனிபோல் மறைந்தன; இராணுவம் முகாம்களை விட்டு வெளிவரமுடியாது உள்ளே முடங்கியது. மக்கள் மகிழ்ந்தார்கள் -வியந்தார்கள் -மனங்களில் நம்பிக்கை சிறிதளவு துளிர்விட, விடுதலைத் தீ சுவாலை விட்டெரிந்தது.

'விடுதலைக்கு' என்று புறப்பட்ட மக்கள் விரோதிகள் எல்லாம் களையெடுக்கப் பட, நிமிர்ந்த பனையாக வளர்ந்தது புலிகள் இயக்கம்.

திடீரென அரசியல் திருப்பம். இந்திய - சிறீலங்கா உடன்படிக்கை; இந்தியப்படையின் வருகை; புலிகளின் ஆயுதக் கையளிப்பு; அதைத் தொடர்ந்து இந்தியாவின் அப்பட்டமான துரோகத்தனம்.

சிங்கள அரசுடனும், தான் வளர்த்த துரோகக் கும்பல்களுடனும் கூட்டுச் சேர்ந்து இந்திய அரசு, புலிப்படையை அழித்து தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க முயற்சித்தது.

திலீபனின் உயிர்த் தியாகம் -தளபதிகள் புலேந்திரன், குமரப்பா உட்பட பன்னிருவரின் சாவு -பாரதத்தினது சுயரூபம் மெல்ல மெல்ல மக்களுக்கு தெரியத் தொடங்கியது. இந்தியா தனது முதுகில் குத்துவதை தமிழீழம் புரிந்து கொண்டது. மூண்டது போர். இந்தியாவின் துணையில்லாமல் தமிழீழ விடுதலைப் போராட்டம் நடைபெறமுடியாது என்றே இந்திய அரசியல்வாதிகளும் -இராஜதந்திரிகளும் - அறிஞர்களும் திடமாக நம்பினர். எமது மக்களில் பலரும் அதையே நம்பினர். உலகமும் அப்படித்தான் பார்த்தது. ஆனால் இந்திய -புலிகள் போரின் முடிவில் அப்போலி எண்ணங்கள் உடைத்தெறியப்பட்டுவிட்டன.

'உலகத்தின் நான்காவது பெரிய படையோடு... அதுவும் ஆயுதங்களைக் கொடுத்துவிட்டு எப்படிப் போராடி வெல்வது? அழிவுக்குத்தான் வழிவகுக்கப் போகின்றது....' எமது மக்கள் எல்லோரும் நம்பிக்கை இழந்தனர். புலிகளின் சரித்திரம் முடியப் போகின்றது. இந்தியனை நாங்கள் வெல்ல இயலாது. எல்லோருக்கும் அவநம்பிக்கை, தோல்வி மனப்பான்மை. உண்மையிலேயே அது விடுதலைப் போராட்டத்திற்கு வாழ்வா அல்லது சாவா என்பதைத் தீர்மானிக்கும் போர். 'முறிந்தது பனை' என்றவர்கள் பலர்.



ஆனால், எமது தாய் மண்ணில் வீசி அனர்த்தம் புரிந்து கொண்டிருந்த இந்தியச் சூறாவளியை, பிரபாகரன் என்ற பெரும் புயல் மெல்ல மெல்லத் தடுத்து நிறுத்தத் தொடங்கியது. நாட்கள் செல்லச் செல்ல மலையாகத் திரண்ட மக்கள் துணையுடன், புலிப்படை காவியம் படைக்கத் தொடங்கியது. சுமார் இரண்டரை ஆண்டுகளின் பின் இந்திய ஆக்கிரமிப்புப் படை வெளியேற்றப்பட்டது. போராட்டம் மிகப் பெரிய தடையை வெற்றிகரமாகத் தாண்டிவிட்டதென, தமிழீழம் மகிழ்ந்தது. மீண்டும் மக்களிடம் நம்பிக்கை ஒளி தெறித்தது. வீதிகளெங்கும் வரிப்புலி வீரர்கள் உலாவர, தமிழீழத்தின் தென்றல், நிமிர்ந்த பனைகளின் ஓலைகளை உரசி புலிக்கொடியை அசைத்துச் சென்றது.

சிறீலங்கா அரசுடன் இராஜதந்திரக் காய் நகர்த்தல்கள் தொடங்கின. இலைமறை காயாக நாம் வெற்றிகளை தேடிக் கொண்டிருந்தோம். ஆனாலும் வழமை போல சிங்கள பேரினவாதப் பூதம் தலையெடுக்கத் தொடங்கியது. மீண்டும் வெடித்தது போர்.

இது வித்தியாசமாக இருந்தது. சிங்கள காவல்துறை நிலையங்கள் துடைத்தெறியப்பட்டன. படை முகாம்கள் தாக்கியழிக்கப்பட்டன. புலிகளின் ஆயுதக் கிடங்கில் மாரி பொழிந்தது.

அதே சமயம் இறுக்கமான பொருளாதாரத் தடை, உணவின்மை, மருந்தின்மை, எரிபொருளின்மை, மின்சாரமின்மை...

**தலைவர் பிரபாகரனின் உயர்ந்த வழிகாட்டலும், ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகளின் மகத்தான தியாகமும் , உலகமே வியக்கும் இந்த உன்னத வளர்ச்சியை நாம் எட்டக் காரணமாய் இருக்கின்றன.**

மீண்டும் மக்களிடம் கேள்விகள் எழுந்தன.
இவை ஒன்றுமே இல்லாது எப்படிப் போராடுவது? இவற்றைத் தாங்கிக் கொண்டு எப்படி மக்கள் உயிர் வாழ்வது? மீண்டும் மக்களின் மனதில் அவநம்பிக்கை -தோல்வி மனப்பான்மை. சிங்கள அரசும் பொருளாதாரத்தடையைத் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற் கெதிரான இறுதி ஆயுதமாகவே பயன்படுத்தியது.

இதை எப்படி நாம் எதிர் கொள்வது என்ற கேள்வியே எங்கும் ஒலித்தது. பொருளாதாரத்தடையை எதிர்கொள்ள எம்மிடம் வளங்கள் இல்லையே -இனியென்ன போராட்டத்தைக் கைவிட வேண்டியதுதான். இல்லையென்றால் பட்டினியால் மக்கள் அழிந்துபடப் போகின்றார்கள். நாட் செல்லச் செல்ல இத்தகைய அவநம்பிக்கை குரல்கள் குறையத் தொடங்கின. ஆனால் போராட்டம் வளர்ந்தது. மக்களிடமும் விடுதலை உணர்வு அதிகரித்தது.

அதேவேளை தரை வழியாக நகர முடியாத படையினர் வான்வழி வந்து அழிவுகளைச் செய்தனர்.

'இந்த பொம்மரை, கெலியை விழுத்தாமல் என்னவென்று சிங்களப் படைகளை வெல்லுறது?' மக்கள் ஆதங்கப்பட்ட போது, யாழ் கோட்டையில் அது நிகழ்ந்தது. வவுனியா, இயக்கச்சி என்று வெற்றிப்பட்டியல் நீண்டது. மக்கள் மகிழ்ந்தார்கள். எமது போராட்டத்தின் வெற்றித் தொடரில் அடுத்து என்ன என்ற ஆவல், அனைத்து மக்களிடமும் எழுந்தது.

ஆனையிறவுப் பெருஞ்சமர் தொடங்கியது. நீண்ட பெரிய மரபுவழிச் சமர். நேருக்கு நேர் இரண்டு இராணுவங்கள் மோதுகின்றன என உலகம் கூறியது. புலிகளின் இராணுவ வளர்ச்சியை - வீரத்தை உலகம் கண்டது; வியந்தது. ஆனாலும், சிறீலங்காவின் முப்படைகளையும் எதிர்த்துப் போராடி வெல்ல புலிகளுக்கு நவீன ஆயுதங்கள் வேண்டுமே! அதை எந்த நாடு வழங்கும்? அதற்குச் சாத்தியம் உண்டா என, மக்கள் கேள்விகளை எழுப்பினர்.

'புலிகளின் ஆயுதக் கிடங்கு சிங்கள இராணுவ முகாம்களில்தான் உள்ளது' என்றனர், புலிகள்; ஏற்கத் தயங்கினர் மக்கள்.

தமிழீழமெங்கும் சிங்களப் படைகள் மீது தாக்குதலை நிகழ்த்தி, சிறுகச் சிறுக ஆயுதங்களைக் கைப்பற்றி, பெரு வெள்ளமெனக் குவித்தனர் புலிகள். அதன் ஒரு முக்கிய கட்டமாக, கட்டைக்காட்டில் சிங்களப்படையின் ஆயுதக்கிடங்கைக் கைப்பற்றி, மக்களை மலைக்கச் செய்து மகிழ்ச்சியில் ஆழ்த்தினர்.

இவ்வாறாக எல்லோரையும் பிரமிக்க வைத்து நாங்கள் போராட்டத்தை வளர்த்து வருகின்றோம்.
எமது மக்கள் மத்தியில் வேரூன்றி இருக்கும் ஆயுதப் போராட்டம் தொடர்பான அவநம்பிக்கையை -நீண்ட கால அடிமை வாழ்வு ஏற்படுத்திய தோல்வி மனப்பான்மைகளை -எம்மால் சாதிக்க முடியாது என்ற தாழ்வு மனப்பான்மையை - இவையெல்லாவற்றையும் உடைத்தெறிந்து கொண்டு, நாம் புதியதொரு வரலாற்றைப் படைத்து வருகின்றோம். முடியுமா? சாத்தியமா? என்று மக்கள் குழப்பத்தில இருந்தபொழுது, ஒவ்வொன்றாக நாம் வெற்றிக்கனிகளைப் பறித்து, படிப்படியாக மக்களிடம் நம்பிக்கையையும் விடுதலை உணர்வையும் ஊட்டி வருகின்றோம்.

முன்னரைப் போலல்லாது இப்போது மக்களின் மனநிலைகளில் பெருமளவு மாற்றம் ஏற்பட்டுவிட்டது.

ஆனாலும் மக்களின் சந்தேகங்களுக்கு - கேள்விகளுக்கு முடிவில்லை. இவை ஒரு வளர்ச்சிப் பரிமாணத்தில் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது.

இப்போது ஒவ்வொரு காலையிலும் புலிகளின் அடுத்த வெற்றி என்ன என்ற செய்திக்காக மக்கள் காத்துக் கிடக்கின்றார்கள்.

ஒவ்வொரு வெற்றியையும் நாம் பெற்றுக் கொள்ளும்போது மக்கள் அடுத்த வெற்றியை எதிர்பார்க்கத் தொடங்குகின்றனர்.

முடியுமா? சாத்தியமா? என்று எழும் சந்தேகங்களுக்கெல்லாம், புலிகளால் முடியும்; புலிகளின் செயற்பாட்டால் எதுவும் சாத்தியமாகும் என்ற பதில்களே நடைமுறையில் கிடைத்துவருகின்றன.

இழப்பு - அழிவுகள் துன்பங்கள் மத்தியில், நிரந்தர விடிவைத்தரக்கூடிய தனியரசொன்றிற்கான அத்திவாரங்கள் போடப்பட்டு வருகின்றன என்பதை, பலர் உணரவில்லை.

தமிழனுக்கென்றொரு படை, தமிழனுக்கென்றொரு காவல்துறை, தமிழனுக்கென்றொரு நீதி -நிருவாகத்துறை, தமிழனுக்கென்றொரு அரச இயந்திரம் பரபரப்பில்லாமல் கட்டியெழுப்பப்படுவதையும் பலர் உணரவில்லை.

யாழ் கோட்டை மீட்கப்பட்டபொழுது......
மாங்குளம் முகாம் தகர்க்கப்பட்டபொழுது....
குண்டு வீச்சு விமானங்கள் வீழ்த்தப்பட்டபொழுது.....
அராலித்துறைக்கண்ணியில் சிங்களத் தளபதிகள் அழிந்தபொழுது.....
மண்டைதீவில் நவீன விசைப்படகைக் கைப்பற்றியபொழுது.....
கட்டைக்காட்டில் ஆயுதக் கிடங்கைக் கைப்பற்றிய பொழுது.....
இயக்கச்சியில் சீனச்சகடையை சுட்டு வீழ்த்திய பொழுது....
இன்னும்.... இன்னும்... நிகழ்கின்ற பொழுது.....
எதிர்பார்ப்புகள் தொடர்கின்றன.....
எங்கள் இலட்சியப் போரின் வெற்றித் தொடரில், அடுத்தது என்ன? ■

# வீரவேங்கை கல்கத்/ கிரிசாந்த்

போராளிகளின் உயிர்களைக் காப்பாற்றினான்.



சென்ற ஆண்டு மணலாற்றில் நடந்த வரலாற்றுப் போரில் வீரச்சாவடைந்த இருநூறுக்கும் அதிகமான வேங்கைகளில் ஒருவன்தான் வீரவேங்கை கல்கத். இவனை கல்கத் என்று கூறுவதை விட கிரிசாந்த் என்றே அநேகமான போராளிகள் அழைப்பர். ஏனெனில் கிரிசாந்த் என்ற பெயரில்தான் இவன் முதன் முதல் இயக்கத்தில் அறிமுகமானவன்.

கிரிசாந்த் 1990 ஆம் ஆண்டு தைமாதம் எமது இயக்கத்துடன் தன்னை முற்றாக இணைத்துக் கொண்டான். யாழ் புத்தூர் கிழக்கு விக்னேஸ்வரா வீதியைச் சேர்ந்த மார்க்கண்டு - ரவீந்திராதேவி தம்பதிகளின் மூத்த புதல்வன். இவனது இயற்பெயர் மதனரூபன். பழம் என்றுதான் வீட்டில் அழைப்பார்கள். இவனுக்கு இரண்டு தங்கைகளும் ஒரு தம்பியும் உண்டு. கிரிசாந்த் யாழ் மத்திய கல்லூரி மாணவன். ஆனாலும் பள்ளிப் பிராயத்திலே பள்ளிப் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு காலத்தின் தேவை கருதி களத்திற்கு வந்தவன். வீட்டிலே தலைமகன். தாய் தந்தையரின் மிகுந்த கட்டுப்பாட்டின் கீழ் வளர்ந்தவன். வெளி உலகத்தை நன்கு அறியாதவன். வயதில் சிறியவன். ஆனாலும் குறும்புத்தனம் இவனிடம் மிகுதியாகக் காணப்பட்டது. இயக்கத்திற்கு வருவதற்கு சில நாட்கள் முன்புகூட இவனது குறும்புத்தனத்தால் தான் இவனது தம்பியின் கை உடைந்தது. ஆனால் இச்சம்பவமே கிரிசாந்தின் குறும்புத்தனத்தை கட்டுப்படுத்த வழிகோலியது. ஆனாலும் இறுதிவரை முற்றாகக் குறையவில்லை.

கிரிசாந்த் வயதில் சிறியவன் தான். ஆனால் போராட்டத்தில் இவனது பங்களிப்பு பெரியது. சண்டையின்போது மருத்துவம் என்பது அத்தியாவசியமானதும் மிக முக்கியமானதுமாகும். இந்த மருத்துவ சேவையைத்தான் கிரிசாந்த் செய்தான். மருத்துவ பணியுடன் மட்டும் இவனது பங்களிப்பு நிற்கவில்லை. சிறீலங்கா இராணுவத்திற்கெதிரான சில தாக்குதல் சம்பவங்களிலும் பங்கு கொண்டவன். முக்கியமாக ஆனையிறவு வரலாற்றுப் போரிலும் இவனது கைகள் துப்பாக்கி ஏந்தியது குறிப்பிடத்தக்கது. இவற்றுடன் கலையுணர்வு இவனிடம் இயல்பாகவே காணப்பட்டது. இவன் சங்கீதம் கற்கவில்லைத்தான். ஆனாலும் இவனது குரல் இனிமையானது. சில வேளைகளில் நண்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி சில பாடல்களைப் பாடுவான். அப்போது நாங்களே எங்களை மெய்மறப்பதுண்டு. அது மட்டுமல்ல. சித்திரங்கள் வரைவதிலும் கெட்டிக்காரன். கானகத்திலே மாவீரர் சிலரின் சமாதிக்கு மாபிள்களைக் கொண்டு பெயர் வரைந்துள்ளான். அதன் நுணுக்கத்தையும் அழகையும் பார்த்தால் இவனது கலைத்திறன் நன்கு புலப்படும். ஒரு உருவத்தைப் பார்த்தால் அதை அப்படியே கீறிவிடுவான். இவன் ஒரு போதும் சும்மா இருப்பதில்லை. வேலை இல்லாத வேளைகளில் ஏதாவது வரைந்து கொண்டு தான் இருப்பான். இயற்கைக் காட்சிகள் இவன் மனதைக் கொள்ளை கொண்டு விடுகின்றன போலும். அநேகமாக இவன் வரையும் படங்கள் எல்லாம் இயற்கைக் காட்சிகள் தான். தன் பெயரை எழுதினால்கூட அதற்கு பூக்களின் படங்களை வரைந்து அலங்கரிப்பான். இவற்றுடன் கைப்பணிப் பொருட்கள்கூட நன்றாகச் செய்வான்.

நாம் பாவனை செய்து கழித்து விடும் சேலைன் ரியூப், சேலைன் வயர் போன்றவற்றை எடுத்துச் சேர்த்து மீன், பூ, பறவை போன்ற பொருட்களை மிகவும் அழகாகவும் நுட்பமாகவும் செய்து முடிப்பான். ஆனால் இவனிடம் ஒரு பழக்கம், எவராக இருந்தாலும் சரி தவறுகள் விட்டால் வெளிப்படையாகவே நேருக்கு நேர் கூறியோ கேட்டோ விடுவான். எதையும் மனதில் வைத்திருக்கும் பழக்கம் இவனிடம் கிடையாது. இதனால் சிலபேரின் கோபத்திற்குக் கூட ஆளானான். என்னதான் இருந்தாலும் இரக்க சுபாவம் இவனிடம் மிகுதியாகவே காணப்பட்டது. அத்துடன் இலட்சியத்திலும் உறுதியாகவே இருந்தான்.

கிரிசாந்திடம் இயக்கத்திற்கு வந்தபிறகும் குறும்புத்தனம் ஓரளவு இருக்கத்தான் செய்தது. ஆனால் எமது இயக்கத்தின் கட்டுப்பாடுகளுக்கு மிகவும் கட்டுப்பட்டவன். ஒரு முறை 1990 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் நண்பன் ஒருவனின் சவாலுக்காக தனது புதிய பல் தீட்டும் பிரசை சேற்றில் வீசி விட்டான். இதற்குத் தண்டனையாக எறிந்த பிரசை நூலில் கோர்த்து கழுத்தில் போட்டுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. பின்பு 1991 ஆம் ஆண்டு தைப்பொங்கல் அன்றுதான் அந்த பிரஸ் அவனின் கழுத்தால் கழற்றப்பட்டது. இலட்சிய உறுதி கொண்ட கிரிசாந்த் பயிற்சி முடித்து சில மாதங்களின் பின் மணலாறு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவில் மருத்துவக் கல்வியைப் பயின்றான். பின்பு சில முகாம்களிலும் சில சண்டைகளிலும் மருத்துவராகக் கடமை புரிந்தான். ஆ. க. வெ. தாக்குதலுக்கும் தாக்குதல் பிரிவில் ஒருவனாகச் சென்றான். பின்னர் மீண்டும் மணலாறு வந்து மருத்துவப் பணியைத் தொடர்ந்தான்.

கிரிசாந்த 1990 ம் ஆண்டு தை மாதம் எமது இயக்கத்திற்குச் சேர்ந்த காலத்திலிருந்து இறுதிக் காலம் வரையிலான காலப்பகுதியில் மூன்று மணித்தியாலங்கள் மட்டும் யாழ் நகரில் கழித்திருக்கிறான். அதுவும் காயமுற்ற போராளி ஒருவனை யாழ் வைத்தியசாலைக்கு கொண்டு வந்தபோது தான். அவனது போராட்ட வாழ்க்கையில் மிகுதிக் காலம் முழுவதும் மணலாற்றுக் கானகத்திலேயே கழிந்தது. ஆனால் அவனுக்கு இறுதிவரை ஒரு ஆசை இருந்தது. தான் பிறந்து வளர்ந்த மண்ணையும் தன் உறவினர்களையும் ஒரு முறையாவது பார்க்க வேண்டும் என்று தான்... இதை வெளிப்படுத்த "யாழ்ப்பாணம் என்று சொன்னால் தேன் சுவையூறும்" என்று பாட்டாகப் படிப்பான். ஆனால் கிரிசாந்த் கொண்ட இலட்சியம் குன்றிடாதவன். தமிழீழம் வென்றெடுக்கப்பட வேண்டும் என்பதில் ஆர்வத்துடன் தீவிரமாகச் செயற்பட்டவன். கிரிசாந்த் இறுதிக்கட்டத்தில் களத்தில் நிற்கும் வேளையில்தான்

அவன் தனது உறவினர்கள் சிலரைக் கண்டான். அவ்வுறவினர்கள் எமது அமைப்பின் சாள்ஸ் அன்ரனி விசேட படையணியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மூலம் வீட்டில் இருந்து ஒரு கடிதம் கூட அவனுக்குக் கிடைத்தது. அதில், 'உனது இலட்சியப் பாதைக்கு நாம் எவ்வகையிலும் தடையாக இருக்கமாட்டோம். ஆனால் தயவு செய்து ஒரு முறையாவது எம்மை வந்து பார்த்துவிட்டு செல். எம்மை விட்டு நீ பிரிந்து இரண்டு வருடங்களாகின்றன. உன்னை பார்க்க எமக்கு மிகுந்த ஆவலாகவும் ஆசையாகவும் உள்ளது' என்று. இக்கருத்தை முதன்மையாகக் கொண்டு அவனது கடிதம் வரையப்பட்டு இருந்தது. ஆனாலும் களத்தில் நின்ற கல்கத்தின் மனம் தளரவில்லை. இலட்சியப்பற்றில் மேலும் வலுப்பெற்றான். உடனே அக்கடிதம் கொடுத்த உறவினரான போராளியிடம் கூறினான். 'அம்மாவை காணும் வாய்ப்பு உங்களுக்குக் கிடைத்தால் சொல்லுங்கோ, மணலாற்றில் ஒரு வரலாற்றுப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இப்போரில் நானும் களத்தில் நிற்கிறேன். போர் முடிந்த பின் நான் உயிருடன் இருந்தால் நிச்சயம் உங்களை வந்து பார்ப்பேன் என்று சொல்லுங்கோ" என்று தீரத்துடன் சொன்னான் அந்த இளம் வீரவேங்கை கிரிசாந்த் என அழைக்கப்படும் கல்கத். இச்சம்பவம் களத்திலே போர் விமானங்களின் அகோரக் குண்டு வீச்சுக்களுக்கும் பாரிய செல் தாக்குதல்களுக்கும் எதிரியிடமிருந்து பாய்ந்து வரும் துப்பாக்கி ரவைகளுக்கும் மத்தியில் தான் நடைபெற்றது.

கிரிசாந்த் இலட்சியத்தில் உறுதியாக தொடர்ந்தும் தன் பணியைச் செய்கின்றான். போர் முனையில் படுகாயமுற்றுக் கிடந்த போராளிகளை எடுத்து வந்து மருத்துவ சிகிச்சை செய்து எத்தனையோ போர் முனையிலே காயமுற்றுக் கிடந்த தன்னையும் விட வயதாலும் உருவத்தாலும் கூடிய போராளிகளைக்கூட தனது சிறிய தோளில் தனித்துத் தூக்கிவந்து மருத்துவ முதலுதவி புரிந்தான். போர் முனையில் காயமுற்றுக் கிடக்கும் போராளிகளைத் தூக்கும்போது அவர்களின் ஆயுதங்களை விடமாட்டான். அவ்வாயுதங்களை எடுத்து இயக்கி சில கணப்பொழுது எதிரியை அதிர வைத்துவிட்டுத்தான் வருவான். இவ்வாறு களத்திலே வேகத்துடனும் தீரத்துடனும் செயல்பட்டுக்கொண்டிருந்த கிரிசாந்த் போர் முனையிலேயே காயமுற்றுக்கிடந்த போராளி ஒருவனை தூக்கிவந்து மருத்துவ முதலுதவி செய்துகொண்டிருந்தபோது தான் எதிரியின் எறிகணையொன்று கிரிசாந்தின் அழகிய முகத்தைப் பதம் பார்த்தது.

அப்போது அந்த வீரவேங்கை மடிந்து வீழ்ந்தான். அவனைக் கையிலே காக்கியெடுத்தபோது அவன் எழும்பவில்லை. குருதிதான் அவனது பச்சை உடைகளை சிவப்பு நிறமாக்கியது. அவனுக்கு மருத்துவ சிகிச்சை செய்யத்துடித்த நாம் ஏமாந்துவிட்டோம். அவன் வீரச்சாவடைந்து விட்டான். கிரிசாந்த் துயில் கொண்டிருந்தான் மாவீரனாக. ■

• கவாஸ்கர்




## தூயதமிழ் வழக்கும்..

அன்றியும், உரையாடுவோரின் கல்வித் தகைமை, மொழி அறிவு, வாழ்க்கை நிலைமை, சூழல் என்பவற்றிக்கு ஏற்ப ஒருவரது பேச்சு மொழியும் மாறுபடுதல் இயல்பே. பொதுவாகப் படித்தோர், நகர வாழ்க்கையினர் என்னும் உயர்நிலைப்பட்டோர் தம் பேச்சில் ஆங்கிலச் சொற்களையும், வடமொழிச் சொற்களையும் மிகுதியாகச் சேர்த்துக் கொள்ளும் தன்மையும் உண்டு. ஆங்கிலமே தெரியாத கிராமப் புறத்து மக்கள் தாம் பேசும் சொற்கள் ஆங்கில மொழிச் சொல் என்றே புரியாது தம் பேச்சில் சில ஆங்கிலச் சொற்களையும் சேர்த்துக் கொள்கின்றனர். (எ+டு: றேடியோ, பேப்பர், றோட் , மார்க்கட்) இன்னும் சிலர் ஆங்கில ஆர்வமும் போலிச் சமூக உயர் நோக்கமும் கொண்டவர்களாக உறவு முறைப் பெயர்கள் சிலவற்றுக்கு ஆங்கிலச் சொற்களையே பயன்படுத்துகின்றனர். (எ+டு: மம்மி, டடா, டடி, அங்கிள், அன்டி) ஆனால் தமிழ் நாட்டுப் பேச்சு நடையுடன் ஒப்பிடும் போது ஈழத்தில் தமிழ்ப் பேச்சில் பிறமொழிக் கலப்பு குறை வென்றே கூறவேண்டும். இப்போது இங்கே தனித்தமிழ் உணர்வு பொதுமக்களிடம் பரவத் தொடங்கிவிட்டது, என்பதற்குத் தனித் தமிழில் தம் பிள்ளைகளுக் குப் பெயர் சூட்டும் மனப்போக்கு காண்பிக்கின்றது.

வாழ்வியலில் இடம் பெற்ற நிகழ்வுகள் வடமொழிப் பெயராலே வழங்கின. ஆனால் இன்று ஈழத்தவரால் பொதுவாக பூப்பு நீராட்டுவிழா, திருமணவிழா, புதுமனை குடிபுகுவிழா, அடிக்கல் நாட்டுவிழா, ஏடு தொடங்குதல், குடமுழுக்கு முதலான தனித்தமிழ் வழக்குகளே பெரிதும் கையாளப் பட்டு வருகின்றன.

மேலும் தலைவர் (அக்கிராசனர்), செயலர்(காரியதரிசி), பொருளாளர் (பொக்கிசாதிபதி), உறுப்பினர் (அங்கத்தவர்) போன்ற இன்னோரன்ன தூய தமிழ்ச் சொற்கள் வழக்கில் இருந்து வந்த வடமொழிச் சொற்களை மறக்கப்பண்ணிவிட்டன.

அண்மைக் காலங்களில் சொற்பொழிவு மேடைகளில் (சமயம் தவிர்ந்த) தனித்தமிழில் பேச முற்படுவதும், புதுப்புதுச் சொற்களை பேச்சாளர்கள் தம் பேச்சில் மக்களுக்கு அறிமுகப்படுத்தும் போக்கும் நல்லதோர் எதிர் காலத்தைக் குறித்துக் காட்டுகின்றன.

தனித்தமிழ் வழக்கைப் பொறுத்தவரையில் மக்கள் தொடர்பு நிலைப்பட்ட நாளிதழ்கள், வானொலி, தொலைக்காட்சி என்பனவற்றின் பணி மிகவும் ஆற்றல் மிக்கதாகும். யாழ்ப்பாணத்தில் வெளிவந்து கொண்டிருக்கும் நாளிதழ்கள் இதுவரை காலமும் தாம் பயன்படுத்தி வந்த பிறமொழிச் சொற்களை கைவிட்டுப் பதிலாக தூயதமிழ்ச் சொல் வழக்குகளைக் கையாண்டு, அவற்றைப் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தும் பெரிய பணியில் ஈடுபட்டுள்ளன. நாளிதழ்களும், ஆக்க இலக்கியங்களும் தனித்தமிழ் வ ழக்கை மக்களுக்கு அறிமுகப்படுத்தி, பயிற்சிக்கு கொண்டுவரும் செயற்பாட்டில் ஆற்றல் மிக்கவையாகும். இம்முயற்சியில் இலக்கியகாரரும் படிப்படியாக ஈடுபடுவார்களேயானால் ஈழத்தில் எழுத்திலும் பேச்சிலும் தனித்தமிழ் வழக்கை நிலைநாட்டுவதோடு, தமிழ் வழங்கும் நல்லுலகத்துக்கே வழிகாட்டும் நாடாகவும் எமது நாடு அமையும் என்பது உறுதி. ■

அடிக்குறிப்பு


1. க. தெய்வசுந்தரம், "மொழியும் வளர்ச்சியும்", புலமை, யூன், 1980.

2. கா. சிவத்தம்பி, 'இலக்கியமும் கருத்து நிலையும்', சென்னை, 1982.

3. J. A. Cuddon, A Dictionary of Literary Terms. Delhi, 1985.

4. E. Annamalai (Ed). Language movements in India, Mysore. 1979.

5. A. C. Bough, A History of English Language. Madras. 1970.

6. K. M. George, Asurvey of Malayalam Literature, 1968.

7. - R. Mugali. History of Kannada Literature, New Delhi. 1978

8. K. Kailasapathy, The Tamil Plurist Movement, Social Scientist May. 1979

9. மு. வரதராசன், மொழி வரலாறு சென்னை, 1975.

10. தி. வை. சொக்கப்பா "நமது பண்பாடு சமஸ்க்கிருத மயமாக்கப்பட்டமை", "சமஸ்க்கிருத ஆதிக்கம்" பெரியார் திறந்த பல் கலைக்கழக வெளியீடு 1985

11. கே. கே. பிள்ளை, தமிழக வரலாறு-மக்களும் பண்பாடும், சென்னை 1981

12. வீரசோழியம், நூ ற் பா 60 உரை பார்க்க

13. இ. கால்டுவெல், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், - சென்னை 1977

14. அருள் செல்வநாயகம், விபுலானந்த ஆய்வு, சென்னை 1964.

15. கா. சிவத்தம்பி 1982.


## பிரபா அமைதி....

கடற்படை பிரான்ஸ் தயாரிப்பான FAC வேகத் தாக்குதல் உலங்கு வானூர்திகளை பெற்றுள்ளதாகவும் சிறீலங்கா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதைவிட சிறீலங்கா படையினரிடம் SF26 ரக போர் விமானங்கள், பெல் 212/412, றெட் றேஞ்சர் ரக உலங்கு வானூர்திகள் ஆகியன கைவசம் உள்ளன.

வான் பலத்தைக் கொண்டும், கடற்பலத்தைக் கொண்டும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பலப்பரீட்சை ஒன்றை நடாத்தலாம் என பகற்கனவு காணும் சிறீலங்கா அரசு

தொடர்ச்சி 14ம் பக்கம் ....

# டென்மார்க் அரசியலை மாற்றிய "தமிழ் கேற்" மோசடி விவகாரம்

முன்னாள் அமெரிக்க அதிபர் நிக்சன் அவர்களுக்கு 'வோட்டர் கேட்' விவகாரம் அமைந்தது போல, இப்போது டென்மார்க்கின் தலைமை அமைச்சர் போல் சலுத்தர் அவர்களுக்கு 'தமிழ் கேற்' எனும் ஊழல் விவகாரம் அமைந்துள்ளது. பத்து வருடமாக டென்மார்க்கின் தலைமை அமைச்சராக இருந்த சலுத்தர் அவர்கள், இந்த மாதம் 14 ஆம் திகதி பதவி விலகியுள்ளார்.

தலைமை அமைச்சர் ஒருவரையே பதவியில் இருந்து விலக வைத்த 'தமிழர் கேற்' விவகாரம் தான் என்ன? இரண்டாம் உலகப் போரின் பின்பு டென்மார்க்கில் இடம்பெற்ற மிகப்பெரிய ஊழல் இதுவென்று கூறப்படுகின்றது. இந்த விவகாரம் துவங்கியது இன்று நேற்றல்ல. 1987 ஆம் ஆண்டில்!

டென்மார்க் சட்டத்தின்படி அங்கு அகதிகளாக அங்கீகரிக்கப்பட்டவர்கள் தமது (நெருங்கிய) குடும்பத்தாரை தம்மிடம் அழைத்துக் கொள்ளலாம். 1987 ஆம் ஆண்டில் அப்போது டென்மார்க் நாட்டின் நீதித்துறை அமைச்சராக இருந்த எரிக். நின் . கென்சன் அவர்கள் தமிழ் அகதிகளைப் பாதிக்கும் செயல் ஒன்றைச் செய்தார்.

டென்மார்க்கில் உள்ள தமிழ் அகதிகளின் குடும்பத்தினர் இலங்கையில் இருந்து அங்கு வருவதைத் தடுக்க எண்ணி அவர்களுக்கு விசா வழங்குவதைத் தாமதிக்கச் செய்தார். 300 இலங்கைத் தமிழர் இதனால் பாதிக்கப்பட்டனர். இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரங்களில் டென்மார்க்கில் இருக்கும் தமிழர் ஒருவரின் துணைவியார் ஒருவர் இறந்துவிடவே விவகாரம் பெரிதானது.

டேனிஸ் பாராளுமன்றம் இந்த தாமதப்படுத்தும் திட்டத்தைக் கண்டித்தது. 1989 ஆம் ஆண்டு நின். கென்சன் அவர்கள் நீதித்துறை அமைச்சர் பதவியிலிருந்து விலகினார். டேனிஸ் பாராளுமன்றம் நடாத்திய விசாரணைகளின்போது -விசா வழங்குவதைத் தாமதப்படுத்தும் திட்டம் தனக்கு எதுவும் தெரியாது என்றும், பாராளுமன்றத்திடம் எந்த தகவல்களும் மறைக்கப்படவில்லை என்றும் தலைமை அமைச்சர் சலுத்தர் அவர்கள் கூறினார். அதுவே இப்போது அவரது பதவிக்கு கோடரியாய் வந்தது.

1989 ஆம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதிபதி கோர்ன்ஸ்லெற் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட விசாரணைக்குழு தனது அறிக்கையை கடந்த 13 ஆம் திகதி வெளியிட்டிருந்தது. விசாரணைக்குழுவின் விசாரணைகள் ஒரு வருட காலத்திற்கு மேலாக நடைபெற்றுள்ளன. 6000 பக்கங்களைக் கொண்ட பத்து கிலோ (22 இறாத்தல்) நிறையுடைய இந்த அறிக்கை, தலைமை அமைச்சர் சலுத்தர் அவர்கள், தவறான செய்திகளை சட்டமன்றத்திற்கு அறிவித்துள்ளார் எனத் தெரிவிக்கின்றது.

விசா வழங்குவதைத் தாமதப்படுத்தும் திட்டத்தை முடிவு செய்தது நின் கென்சன் அவர்களே என்றாலும், இம்முடிவு பற்றி சலுத்தர் அவர்கள் அறிந்திருந்தார் என்று இவ்வறிக்கை தெரிவிக்கின்றது. இது பற்றி தெரிந்திருந்தது மட்டுமன்றி, சட்டத்தை இயற்றும் பாராளுமன்றத்திற்கு தவறான செய்திகளை வழங்கியுள்ளார் என்றும் இவ் அறிக்கை சலுத்தர் மீது குற்றம் சுமத்தியது. இலங்கைத் தமிழரை தனியாகப் பாதிக்கும் வகையில் கொண்டு வரப்பட்ட, சட்டத்திற்குப் புறம்பான இத்திட்டத்தைப் பாராளுமன்றத்திடம் இருந்து மறைத்து பொய் உரைத்ததே தலைமை அமைச்சர் மீது கூறப்பட்டுள்ள குற்றம்.

'தமிழ் கேற்' விவகாரத்தால் பதவி விலகியவர் தலைமை அமைச்சர் சலுத்தர் மட்டுமல்லர். இவருடன் சேர்ந்து டேனிஸ் பாராளுமன்ற சபாநாயகர் பீட்டர் க்ளோசனும் பதவி விலகியுள்ளார்.

அகதிகளைப் பாதிக்கும் திட்டத்தை உடனடியே நீக்கத் தேவையான அளவு அதிகாரத்தைப் பயன்படுத்த க்ளோசன் அவர்கள் தவறிவிட்டார் என்று அவ் அறிக்கை கூறுகின்றது. நின் . கென்சன் அவர்கள் பதவி விலகிய பின்பு நீதித்துறை அமைச்சராகப் பதவி ஏற்றவர் க்ளோசன் அவர்கள்.

'கேர்ன்ஸ்லெற்' விசாரணைக்குழு அறிக்கையைப் படிப்பதில் டேனிஸ் மக்கள் பெரும் ஆர்வம் காட்டினர். 6000 பக்கங்களையும் முழுமையாகப் படிக்க முடியாதவர்களுக்கு ஏதுவாக இவ் வறிக்கையின் பிழிவு மட்டும் எடுக்கப்பட்டு ஒரு சிற்றறிக்கை வெளியிடப்பட்டிருந்தது.

63 வயது நிரம்பிய சலுத்தர் அவர்கள் ஒரு தலைசிறந்த யதார்த்தபூர்வமான அரசியல்வாதி. ஐரோப்பிய நாடுகளுள் வறுமை மிக்க நாடுகளில் ஒன்றாய் இருந்த டென்மார்க்கின் பொருளாதாரத்தைக் கடந்த பத்து ஆண்டுகளுக்குள் பன்மடங்காய்ப் பெருகச் செய்தவர் அவர். இவரது பதவி விலகலுக்குக் காரணமாய் இருந்த 'தமிழ் கேற்' விவகாரம் டென்மார்க் அரசியலில் பெரும் மாற்றத்தையே கொண்டுவந்துள்ளது. பத்து ஆண்டுகளின் பின்பு டென்மார்க்கின் ஆட்சிப் பீடத்தை சமூக ஜனநாயகக் கட்சி பிடித்துள்ளமை இவ் விவகாரத்தால் ஏற்பட்டுள்ளது. ■

## அனல்களை....

பல ஏக்கர் பரப்பளவில் வேளாண்மை செய்தான். இரவும் பகலும் வயல் வெளிக்குள்ளேயே விழித்திருந்தான். மற்றைய வேளைகளிலும் அப்படித்தான். அதற்குள் சண்டை என்றதும் வந்து நிற்பான்; தானும் பங்கு கொள்ள வேண்டும் என்று சண்டை பிடிப்பான்.

அவனை .. எப்படி... அது மதிக்க முடியும்?

அவனது ஒரு தம்பியான பீரிஸ் வீரமரணமடைந்திருந்தான். மற்றைய தம்பியான பீற்றரும் தாக்குதற் களங்களில் முன்னுக்கு நின்றான்.

பெரும்பாலும் இராசதுரைக்கு சந்தர்ப்பங்கள் கிடைப்பதில்லை. ஆனால் ஒரு தாக்குதலில் பின்னணி வேலைகள் முழுவதும் அவன் தலையிலேயே இருக்கும். அப்படி இருந்தும் ராதா அண்ணையுடன் சென்று யாழ் தொலைத் தொடர்பு நிலையத்திலிருந்த மினிமுகாம் மீதான தாக்குதலில் பங்குபற்றிவிட்டு வந்தான்.

பூநகரி கோட்டை இராணுவ முகாம் தாக்குதலுக்குத் திட்டமிட்டபொழுது மன்னாருக்கு வந்து சேர்ந்த பீற்றரும் இருந்தான்; இராசதுரையும் இருந்தான். இருவருமே தாக்குதலில் பங்குபற்ற வேண்டுமென நின்றனர்.

தவிர்க்க முடியவில்லை. அந்தத் தாக்குதலில் இருவருமே பங்குபற்றினார்கள்.

அம்மாவுக்குத் தன் பிள்ளைகளை நினைக்க பெருமையாக இருந்தது. அவளுக்கு எல்லோரும் பிள்ளைகள் தான்.

இந்தியப் படைகளுடனான போர் ஆரம்பமான பொழுது, பீற்றரும் இராசதுரையும் மிகவும் தேவையானவர்களாக இருந்தார்கள். கிராமங்களிலும் காடுகளுக்குள்ளும் அடிக்கடி இந்தியர்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. சண்டையின் பின்பு இடம் மாறிச் செல்ல வேண்டியிருந்தது. அண்ணன் தம்பி இருவரும் வேறு வேறு முனைகளில் நின்றனர். அந்தக் கடினமான நாட்களில் அவர்கள் இருவரும்தான் வழிகாட்டிகள்.

'காட்டிற்குள் வாழ்ந்தாலும் உணவிற்காக எப்படியோ கிராமங்களுக்குத்தான் வரவேண்டியிருந்தது. அம்மாவின் வீடோ இரவில் மட்டும் இயங்கும் இரகசியத்தங்ககம். அநேகமாக அந்த வீடு இரவில் உறங்குவதில்லை. நீண்ட நாட்கள் அந்த வீடு அப்படித்தான் இருந்தது. காலப் போக்கில் தேசவிரோதிகளும் இந்தியர்களும் அங்கு அடிக்கடி வரத் தொடங்கினார்கள். ஓடி ஒழிப்பதும் திரும்பி வருவதும் அவர்களின் வாழ்க்கையானது.

1988, ஐப்பசித் திங்கள், இரவு. பீற்றரும் அவன் தோழர்களும் இராணுவத்தினர் வரும் பாதையில் பொறி வெடிகளைப் புதைத்துக் கொண்டிருந்தார்கள். பொறி வெடி ஒன்றின் தவறுதலான முழக்கம்.

பீற்றரை அவன் தோழர்கள் தூக்கி வந்தார்கள். அவனுக்கு கண்கள் இரண்டும் தெரியவில்லை.

இரவு, காட்டுக்குள் இருந்தோம். வைத்திய வசதியில்லை. இதயங்கள் துடித்தன. அவன் காப்பாற்றப்பட வேண்டும். அந்த வெறுப்பூட்டும் இரவு எப்படியோ முடிவுக்கு வந்தது.

மறுநாள். பீற்றரை வேறு மாவட்டத்திற்கு வைத்திய வசதிக்காக அனுப்புவதென தீர்மானிக்கப்பட்டது. பீற்றரின் மூத்த அண்ணன் ராசதுரை முன்னால் வழிகாட்டியாக நடந்தான். பின்னால் பீற்றரைத் தூக்கிக் கொண்டு அவன் தோழர்கள் நடந்தார்கள்.

சின்ன வயதில் அவர்கள் ஒன்றாக உடும்புக்கும், தேனுக்கும் நடந்தவர்கள் தான்; ஆனால் இன்று.... உயிருக்கு போராடும் தம்பி.... கண்களை இழந்து.....

காடு முடிந்தது. அவர்களை அழைத்துப் போக உளவு இயந்திரத்தில் வேறு தோழர்கள் வந்திருந்தார்கள்.

அனைவரையும் ஏற்றிக் கொண்டு அந்த உழவு இயந்திரம் காட்டுப் பாதைகளின் வழியிலேயே ஓடியது.

முன்னுக்கு இருவர் மிதி வண்டியில் வெடிப்பதற்கு தயாராக வைத்திருந்த கைக்குண்டுகளுடன் பாதுகாப்புக்காகச் சென்று கொண்டிருந்தார்கள்.

வழியில், பற்றைக்கூடலொன்றுக்குள் இந்தியர்களும் தேசவிரோதிகளும் பதுங்கியிருந்தது ஒருவருக்குமே தெரியாது.

மிதிவண்டி கடந்து ஓடியது. வெடிச்சத்தங்கள். உழவு இயந்திரம் திசை கெட்டு ஓடி மோதி நின்றது. எல்லாமாக பதினொரு தோழர்களை நாம் இழந்திருந்தோம். அம்மாவின் புதல்வர்கள் பீற்றர்.... இராசதுரை.....

காற்றில்.... செய்தி பறந்தது. அம்மா ஏற்றுக்கொள்ள முடியாமல் தவித்தாள். அழுது துடித்தாள். கட்டி அழுவதற்கு அவளுக்கு பிள்ளைகளின் உடல்கள் கூடக் கிடைக்கவில்லை. அதற்காகவும் அம்மா அழுதாள். கடவுளே! இரண்டு பேரும் ஒன்றாக... அந்த அம்மாவால் துயரத்தை எப்படித் தாங்கமுடியும்!

இத்துடன் மூவர் ... அவள் வயிற்றில் பிறந்தவர்கள். ஒருவனின் உடலைக்கூட அம்மா... அழுதாள்; அழுது தீர்த்தாள்..

இந்தியர்களுடனான சண்டை தொடர்ந்து கொண்டிருந்தது. அதன் பின்பும், காட்டின் விளிம்பில் ஒரு தலை எழுந்து பீற்றரின் வீட்டை எட்டிப் பார்க்கும்.

அதற்கிடையில் அம்மா பார்த்திருப்பாள். சாப்பாடு அல்லது தேநீர். அம்மா காட்டு விளிம்புக்கு கொண்டு செல்வாள். சிறிது நேரத்தில் அந்த இளைய புலிகள் காட்டில் மறைந்து போவார்கள்.

போராட்டம் வளர்ந்தது; இந்தியர்கள் வெளியேற்றப்பட்டார்கள். இயக்கம் மிகப் பெரிய அமைப்பாக வளர்ந்தது.

இன்று புதிய போராளிகள் நடந்து கொண்டிருப்பார்கள். ஆச்சி வீதியில் நின்று, வியப்புக் கலந்த மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருப்பாள்.

யாராவது விசயம் தெரிந்தவன் ஆச்சியைப்பற்றிச் சொல்வான். புதியவர்கள் மரியாதையுடன் ஆச்சியுடன் கதைப்பார்கள். செல்லங் கொஞ்சுவார்கள்.

எதிரில் நிற்கும் குறும்புக்கார புதியவன் ஒருவனின் இரண்டு காதுகளையும் பிடித்திழுத்து செல்லமாகத் தலையில் இடிப்பாள் ஆச்சி. தூரத்தில் நின்று அப்பு பார்த்து இரசிப்பார்.

அந்தச் சிறிய குடிசையின் ஒரு பக்கமாக தலைவரின் படம் இருக்கும். மற்றைய பக்கத்தில் மாவீரரான அம்மாவின் பிள்ளைகளின் படங்கள் இருக்கும். தலைவரைக் காட்டி, "இது என் மூத்த மகன்" என்பாள் அம்மா. ஆச்சியைத் தெரிந்த பழைய போராளிகள் பேசாமல் இருப்பார்கள். புதியவர்களோ மகிழ்ச்சியுடன் சிரிப்பார்கள். தனது பிள்ளைகளின் படங்களைப் பார்த்ததும் அம்மாவின் முகம் சட்டெனக் கறுக்கும். ஒரு கணம் கவலையில் தவிப்பாள். பின்பு சமாளித்துக் கொள்வாள்.

"நீங்கள் எல்லோருமே எனது பிள்ளைகள்தான்ரா" -சிரிப்புடன் ஆச்சி தனது பிள்ளைகளை அணைப்பாள்.

'சரி, இப்போது சொல்லுங்கள் அந்த வீரத்தாய் வணக்கத்துக்குரியவள் இல்லையா! விலகி நில்லுங்கள்; அம்மா வருகிறாள். அவளுக்கு மரியாதை செய்யுங்கள்.

தன் பிள்ளைகளில் மூவரைப் போராட அனுப்பி, தானும் ஒரு போராளியாக வளர்ந்து... இவள் போன்ற அன்னையர்களினால் தான், எங்கள் தேசம் பெருமையுடன் நிமிர்ந்து நிற்கிறது!■

- குரு



# கிழக்கைத் துப்பரவாக்குவது அல்லது கிழக்கைப் பங்கு போடுவது

சில மாதங்களிற்கு முன்பு கிழக்கில் செய்யப்பட்ட வெற்றி பெறாத 'ஒபறேச்ன் ஜெயபாரா'விற்குப் பிறகு, 'ஒபறேசன் ஜெயகங்கா' நடத்தப்பட்டது.

கிழக்கில் மேலும் இது போன்ற 'ஜெய'ங்களுக்கான இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம் என ஊகிக்க இடமுண்டு. அவர்கள் கிழக்கைத் துப்பரவாக்க விரும்புகிறார்கள். கிழக்கில் 'ஜெயம்' என்று அவர்கள் கருதுவது நகரங்களுக்கு வெளியில் தொடர்ந்தும் சவாலாகக் காணப்படும் புலிகளை அவர்களின் மறைவிடங்கள் வரை சென்று தாக்கி அழிப்பதைத்தான். கிழக்கில் ஒரு தேர்தலை நடத்தும் பட்சத்தில் அத்தேர்தலைக் குழப்பக்கூடிய குறைந்த பட்ச பலமற்ற நிலைக்குப் புலிகளை ஒடுக்குவதே அவர்களின் பிரதான நோக்கமாயிருக்கலாம். கிழக்கைப் பூரணமாக தமது ஆதிக்கத்திற்குள் கொண்டு வருவதன்மூலம் தமிழர்களின் தாய் நிலக்கோட்பாட்டைச் சிதைத்துவிடுவது என்பதில் கொழும்பு ஆரம்பத்திலிருந்தே தீவிரத்தோடும் மூர்க்கத்தோடும் காணப்படுகின்றது. கிழக்கை இழந்தால் பிறகு தமிழீழக் கோரிக்கை தலையில்லாத ஒரு முண்டத்தைப் போல் ஆகிவிடும். எதுவிதத்திலும் அரசியல் ரீதியாகவோ, இராணுவ ரீதியாகவோ -கிழக்கைப் பிரித்தெடுத்துப் பங்கு போடுவதில் கொழும்பு தொடர்ந்தும் உறுதியாதகவும் தந்திரங்களோடும் இருக்கின்றது.

கிழக்கு இப்போது இன முரண்பாடுகளின் களமாயுள்ளது. அங்கு தமிழர்களிற்கும் முஸ்லீம்களுக்கும் இடையிலான கசப்புணர்வுகள் அவற்றின் மோசமான கட்டத்தை அடைந்துவிட்டன. வடக்கு - கிழக்கு இணைப்பிற்கு முஸ்லீம்களின் ஆதரவு அநேகமாகச் சந்தேகத்துக்குரிய ஒன்றாகிவிட்டது. இந்நிலையில் முஸ்லீம்களோடும் சில தமிழர்களோடும் சேர்ந்து கிழக்கைப் பங்கு போடுவதற்கு கொழும்பு விரும்புகிறது.

கொழும்பின் மேற்படி விருப்பமும், சமீபத்தில் பெரிதும் விவாதிக்கப்பட்ட ரெலோவினதும், ஈ.என்.டி.எல்.-எவ். சிறீனிவாசனினதும் தீர்வுக்கான யோசனைகளும் ஒரே கோட்டில் சந்திக்கின்றன. இந்த யோசனைகள் தமிழர்களின் தாய் நிலத்தைப் புறக்கணிக்கின்றன. வடக்கையும் கிழக்கையும் தனித் தனி அலகுகளாகப் பார்க்கின்றன. இந்த யோசனைகளை இரு பிரதான சிங்களக் கட்சிகளும் வரவேற்கின்றன. முஸ்லீம்களிடமும் சாதகமான சமிக்ஞைகள் காணப்படுகின்றன. கொழும்பிலிருந்து வெளியாகும் அநேகமான பத்திரிகைகள் மேற்படி யோசனைகளைப் பாராட்டியும் இந்த யோசனைகளை எதிர்த்த தமிழ்க் கட்சிகளைச் சாடியும் ஆசிரியர் தலையங்கங்கள் எழுதின. தமிழர்களின் தாய் நிலத்தை இரு வேறு துண்டுகளாகப் பார்க்கும் யோசனைகளைச் சில தமிழர்களே முன்மொழிந்திருப்பது சிங்களவர்களுக்கு அதில் தொங்கிக் கொள்ள வசதியாகிவிட்டது.

சண்டே ஐலண்ட் இல் தராகி, ரெலோவின் மேற்படி 'மூலோபாயத்தை' கிழக்கு மையப்பார்வையாக வர்ணிக்கிறார். இப்போது ரெலோவின் பெரும்பாலான உறுப்பினர்கள் கிழக்கைச் சேர்ந்தவர்கள். எனவே கிழக்கில் தனது ஆதிக்கத்தை நிறுவுவதற்கு ரெலோ விரும்புகிறது. ஏற்கனவே கிழக்கில் ரெலோ இராணுவத்தோடு சேர்ந்து தொழிற்படுகிறது. எனவே கிழக்கைத் தனியலகாக ரெலோ கருதுவது என்பது குறைந்த பட்சம் கிழக்கிலாவது தனது ஆதிக்கத்தை நிறுவலாம் என்று நம்புவதால் தான் என்று தராகி எழுதுகிறார். அவ்வாறாயின் யாழ்ப்பாண எம்.பி. சிறீனிவாசன் இத்தகைய தீர்வை ஏன் முன்வைத்தார்?

யாழ்ப்பாணம் திருநெல்வேலியைச் சேரந்த சிறீனிவாசன் 70களில்(?) பாராளுமன்றத் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிட்டுத் தோற்றவர் என்று கூறப்படுகிறது. பின்னர் இலண்டன் வாசியாகிவிட்ட இவரிற்கு தற்சமயம் இலண்டனில் ஏராளமான சொத்துக்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது. 88 பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் ஈ.என்.டி.எல்.எவ். சார்பாகப் போட்டியிட்டு இவர் பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 600 க்கும் குறைவானது. இவ்விதம் சுமார் 600 தமிழர்களின் பிரதிநிதியாகிய இவர் தமிழர்களின் தாயகத்தைத் துண்டுகளாகப் பார்க்கும் தீர்வை (அவர் சார்ந்த இயக்கத்தின் ஒப்புதலைப் பெறாமலே) எதற்காக முன் வைத்தார்? தராகி கூறுகிறார்; சிறீனிவாசன் விரைவில் இலண்டன் போய் விடுவார் என்று. அதன் பின் அவருடைய யோசனைகள் வெறும் கடுதாசித் தீர்வாகி விடும். மேற்படி யோசனைகளின் பின்னணியில் அரசாங்கத்தின் கை இருப்பதாக கொழும்பில் கூறுகின்றார்கள்.

கிழக்கில் ஒரு தேர்தலை நடத்தக் கொழும்பு விரும்புகிறது என்றும் அதன் பொருட்டு கிழக்கைத் துப்பரவாக்கவும், பங்கு போடவும் அது தயாராகி வருகிறது என்றும், இதற்கு இசைவாக ரெலோவையும், சிறீனிவாசனையும் கொழும்பு கையாள்வதாகவும் கொழும்பிலிருந்து வரும் செய்திகள்

## நிலாந்தன்

கூறுகின்றன. கிழக்கிலுள்ள பெரும்பாலான அரசியல்வாதிகளும் பாராளுமன்ற உறுப்பினர்களும் மேற்படி தீர்வுக்கு மறைமுக ஆதரவு என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. இத்தகைய ஆதரவுக்குரிய பின்னணி விபரீதமானது. வடக்கு மையத் தலைமைத்துவத்தை எதிர்த்து கிழக்கில் தமிழ்த் தலைமைத்துவம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு மேற்படி தீர்வு ஒரு சந்தர்ப்பத்தைத் தருவதாக முன் சொன்ன அரசியல்வாதிகளும் சில பிரமுகர்களும் கருதுவதே அவர்கள் இந்தத் தீர்வை ஆதரிப்பதற்குரிய பிரதான பின்னணி என்றும் கூறப்படுகிறது.

இதன்படி கிழக்கில் ஏற்கனவே (தமிழர்களின்) நகரங்களில் நிலை கொண்டுள்ள ரெலோ அங்கு தேர்தலைச் சந்திக்க தயாராகலாம் என்று பொதுவாக ஊகிக்கப்படுகிறது. வரும் ஆண்டு இலங்கையைப் பொறுத்தவரை ஒரு தேர்தல் ஆண்டாக அமையலாம் என்று நம்பப்படுவதால் அதையொட்டி கிழக்கில் இராணுவ நடவடிக்கைகளை வேகப்படுத்தி கிழக்கைத் துப்பரவாக்கி, பின் தேர்தல்கள் மூலம் பங்கு போட கொழும்பு விரும்பக் கூடும்.

ரெலோ இப்போது சிறீலங்கா இராணுவத்துடன் கிழக்கில் தமிழர்களின் நகரங்களில் நிலை கொண்டுள்ளது. அங்கும் முஸ்லீம்களின் நகரங்களில் அவர்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்று கூறப்படுகிறது. கிழக்கில் சிவில் எந்திரத்தை தம்மிடம் தரும்படி சில காலங்களுக்கு முன்பு ரெலோவிடுத்த கோரிக்கையை கொழும்பு நிராகரித்து விட்டது. அத்தோடு வடக்கில் இராணுவத்தின் பிடியிலுள்ள பிரதேசங்களில் ரெலோவை அநுமதிப்பதற்கும் கொழும்பு தயாராக இல்லை என்று கூறப்படுகிறது. பொதுவாக கொழும்பிலுள்ள தமிழ் இயக்கங்களைப் பொறுத்தவரை கொழும்பு ஒரு விடயத்தில் உறுதியாகவும் தீர்க்கமாகவும் செயற்படுகிறது. அதாவது, யுத்த முனையில் மேற்படி இயக்கங்களை ஒன்றாகச் சேர்ந்து இயங்கவிடாமல், தனித்தனியாக வெவ்வேறு யுத்தமுனைகளில் இவைகளைப் பயன்படுத்துவது என்பதே அது. இப்போது கிழக்கில் ரெலோ நிறுத்தப்பட்டுள்ளது. வடக்கில் வவுனியாவில் புளொட்டும், தீவுகளில் ஈ.பி.டி.பி.யும் நிறுத்தப்பட்டுள்ளன.

ரெலோ கிழக்கில் தான் பலத்துடனுள்ளதாகக் கருதுகிறது. கிழக்கைத் தனி அலகாக்கி அங்கு நிகழக்கூடிய ஒரு தேர்தலின் மூலம் தன்னை ஸ்தாபிப்பது அதன் நோக்கமாயிருக்கலாம். பிரிக்கப்படாத தாய்நிலம் புலிகளின் பிரதான நிபந்தனைகளில் ஒன்று. வடக்கு தொடர்ந்தும் புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. இந்நிலையில் வடக்கையும் கிழக்கையும் தனித்தனி அலகுகளாக கருதுவதன் மூலம் இத்தீர்வு ஒருவிதத்தில் வடக்கைக் கைவிடுகிறது. இது மறைமுகமாக வடக்கைப் புலிகளின் ஆதிக்கத்தில் விட்டுவிடுகிறது. வடக்கில் புலிகளின் ஆதிக்கத்தை உடைப்பது சாத்தியமற்றது என்பதும் இங்கு யுத்தம் காலக்கெடுகளுக்கு அப்பாலும் முடிவின்றித் தொடரக்கூடியது என்பதையும் கொழும்பும், கொழும்பிலுள்ள தமிழ் இயக்கங்களும உணரத் தொடங்கியுள்ளன. எனவே குறைந்தபட்சம் கிழக்கையாவது தனது ஆதிக்கத்துள் வைத்திருக்க ரெலோ விரும்புகிறது. ஆனால் மற்ற இயக்கங்கள் தாய் நிலம் துண்டாடப் படுவதற்கான தீர்வுகளை ஒப்புக் கொள்வதன் மூலம் தமிழ்த் தேசிய வாதத்திற்குரிய ஏகத் தலைமைத்துவம் புலிகளிடம் சென்றுவிடும் என்ற எச்சரிக்கை உணர்வோடு மேற்படி யோசனைகளை எதிர்க்கின்றன.
எனினும், எல்லாவற்றிற்கும் அப்பால் கிழக்கைத் துப்பரவாக்குவது அதாவது புலிகளின் போர் ஆற்றலை முறியடிப்பது உடனடிச் சாத்தியமற்றது. அங்கு இராணுவம் புலிகளின் மறைவிடங்களைத் தேடிச் செல்லும்போது புலிகள் தமக்கு நன்கு பரிச்சயமான காட்டின் ஆழங்களிற்குச் சென்று விடுவார்கள். புலிகளின் கைவிடப்பட்ட முகாம்களைக் கைப்பற்றுவதைத்தான் தொடர்ந்தும் எவ்வளவு காலத்திற்கு வெற்றி என்று சொல்லித் திரிவது? ■

## பிரபா அமைதி........

யுத்த ஆயத்தங்களை முடுக்கி விட்டுள்ளதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பு பத்திரிகைகளின் செய்திகளின்படி, உத்தியோக பூர்வ சிறீலங்கா பேச்சாளர் ஒருவர், தாம் புலிகள் மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடாத்தி புலிகளின் பலத்தை பரீட்சிக்கத் திட்டமிட்டு வருவதாக தகவல் வெளியிட்டுள்ளார். இத்தகவல் சிறீலங்கா அரசு போர் ஒன்றைத் தொடுப்பதற்கு ஆயத்தமாவதை உறுதி செய்துள்ளது.

அதேவேளை எத்தகைய தாக்குதல்களையும் சமாளிக்கக் கூடிய வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இருப்பதாகவும் எனவே சிறீலங்கா அரசின் எந்த இராணுவ மூலமான தீர்வும் தோல்வியையே கொடுக்கும் என சர்வதேச அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். இவ் அவதானிகள், "சிறீலங்காவும் இந்தியாவும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கையும், தமிழீழ விடுதலைப் புலிகளின்பால் சர்வதேச சமூகத்தின் ஆதரவையும் பரிவையும் வலுப்படுத்தி தமிழீழத்தின் தேவையை உறுதிப்படுத்தி வருகின்றது எனக் கூறியுள்ளனர். ■

## எளிமை;இனிமை;உறுதியின் சின்னமாகத் திகழ்ந்தவர் மாவீரர் கிட்டு சமாதானப்புறாவை பறக்கவிடச்சென்ற அவரை சாய்த்துவிட்டார்களே!

# கிட்டுவின் மரணத்திற்கு காரணமானவர்கள் சரித்திரப் பழிக்கு ஆளாகிவிட்டார்கள்

### திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் கி. வீரமணி விடுத்த உருக்கமான அறிக்கை



**1993**ம் ஆண்டின் துவக்கத்திலேயே உலகத் தமிழ் இனத்தினை மிகுந்த சோகத்திற்கும் எல்லையற்ற துயரத்திற்கும் ஆளாக்கிய சம்பவம் - விடுதலைப் புலிகளின் முன்னணித் தளபதிகளின் ஒருவரான தோழர் கிட்டுவின் மறைவு ஆகும்.

யாழ்ப்பாணத்தில் தளபதியாகஇருந்து நடத்திய போரில் அவர் ஒரு காலிழந்த நிலையிலும், சென்னை வந்து தங்கியிருந்தபோது அவருடன் பழகும் வாய்ப்பைப் பல அதிகாரிகள், பல தலைவர்கள், பல நண்பர்கள் ஆகியோர் பெற்றதுபோல நானும் பெற்றேன்.

காட்சிக்கு எளியவர் அவர்! கடுஞ்சொல்லர் அல்லர்; கொள்கையில் தெளிவும் கொண்ட நெறியில் பிடிப்பும் கொண்ட ஓர் சிறப்பான இலட்சிய வீரர். புன்னகை தவழும் முகத்துடனும், இலட்சியம் பொங்கும் உள்ளத்துடனும், எவரிடமும் மிகுந்த மரியாதையுடன் அவர் பழகிய பாங்கினைக் கண்டு அவரைச் சந்தித்த உளவுத்துறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள், மத்திய அரசின் அதிகாரிகளே கூட வியந்து, புகழ்ந்து பாராட்டியது உண்டு.

மென்மையான அணுகுமுறை அவருடையது என்றாலும், அதில் எவருக்கும் எதிலும் விட்டுக்கொடுக்காது; எந்த இடரையும் அலட்சியப் பார்வையோடு சந்தித்து சமாளித்த ஒரு தனித்தன்மை வாய்ந்த இனிய சுபாவத்திற்கு சொந்தக்காரர் அவர்!

கட்டுப்பாடு என்பதுதான் அவரது உயிர்மூச்சு என வாழ்ந்தவர். ஈழத்தில் தொடர்ந்து நடைபெறும் தமிழினைப் படுகொலைக்கு ஒரு விடிவு வராதா, அமைதி காணும் திருப்பம் ஏற்படாதா என்று உலகம் முழுவதிலுமுள்ள மனித நேய உணர்வாளர்கள் அனைவரும் ஆவலோடு எதிர் நோக்கி இருந்த நிலையில், அதைச் சாதிக்கச் சென்ற ஒருவர் இப்படி சாவினால் சாய்க்கப்பட்டு விடுவதா? அந்தோ கொடுமை! கொடுமையிலும் கொடுமை!!

ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தம் போடப்பட்ட நிலையில், அவ் ஒப்பந்த விதிகளின்படி அனுமதிக்கப்பட்ட சுமார் 12 தளபதிகள் பல முக்கிய குறிப்புக்களை எடுத்துக் கொண்டு வடகிழக்குப் பகுதிகளுக்குத் திரும்புகையில் அவர்களை சிங்கள இராணுவம் கைது செய்து கொழும்புக்கு கொண்டு செல்ல முயன்றபோது, தடுக்க வேண்டியவர்கள் தடுத்து தங்கள் கடமையைச் சரிவரச் செய்திருந்தால் பிறகு ஏற்பட்ட எத்தனையோ இடைஞ்சல்களும், இழப்புக்களும் தவிர்க்கப்பட்டிருக்குமே!



அதற்கு இணையாக அல்லவா கிட்டுவும், அவரது சக தோழர்களின் மரணமும் ஏற்பட்டுள்ளது!

இந்த நாட்டினை நோக்கி அவர்கள் வரவில்லை! சர்வதேசச் சட்டத்தின்படி அவர்கள் வேறு தொலை தூரத்தில் சென்றதாகக் கூறப்படும் நிலையில், அதுவும் ஈழத்தில் சமாதான வெண்புறாவை பறக்கவிட ஏற்பாடுகளைச் செய்யப் புறப்பட்டுச் சென்ற நிலையில், இப்படி ஒரு வேண்டாத பணியென்றால் அதற்குப் பொறுப்பானவர்கள் இந்தியக் கடற்படையானாலும் சரி, மற்ற எவரானாலும் சரி அவர்கள் தமிழினத்தின் படுகொலையை தடுப்பதற்கு தவறியவர்கள் மட்டுமல்ல; அதனைத் தொடரவேண்டும் என்று விரும்புவர்களாக அல்லவா ஆகிவிட்டார்கள்? இது வன்மையான கண்டனத்திற்குரியதாகும். சரித்திரப் பழியை அவர்கள் ஏற்க வேண்டியது தவிர்க்க இயலாத ஒன்று!

உண்மைகளை காயப்படுத்த முடியுமே தவிர, சாகடிக்க ஒருபோதும் முடியாது!

'இந்து' நாளேட்டில் வந்துள்ள ஒரு செய்தியில், மாத்தய்யாவுக்குப் பதில், கிட்டு யாழ்ப்பாணத்திற்கு விடுதலைப் புலி இயக்கத்தால் அழைக்கப்பட்டுச் சென்றார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அது சரியான செய்தி என்று வாதத்திற்காக ஒப்புக் கொண்டால், அங்கே யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்றவர், எதற்காக தமிழ் நாட்டினை நோக்கி வருவார்? தமிழ் நாட்டினை நோக்கி அக்கப்பல் ஆயுதங்களோடு வந்தது: இங்கே நமது கடல் எல்லைக்குள்தான் பிடித்தோம் என்பது எவ்வளவு பெரிய கற்பனை! 'பொய்யைச் சொன்னாலும் பொருத்தமாய்ச் சொல்லுங்கடா, அடப் போக்கத்த பசங்களா' என்று பாடிய உடுமலை நாராயணக் கவியின் வரிகள்தான் நமக்கு நினைவுக்கு வருகின்றன.

ஈழத்தில் தொடர்ந்து பல ஆண்டுகளாக நடைபெறுவரும் இனப்படுகொலைக்கு ஓர் முடிவு வராதா என்ற ஏக்கத்துடன் உள்ள மனித நேயக்காரர்களுக்கு இந்தச் சம்பவங்கள் எல்லையற்ற துன்பத்தைத் தரக்கூடியது.

மற்ற வெளிநாட்டு அரசுகள் காட்டும் மனிதாபிமான உணர்வைக்கூட இங்குள்ள அரசுகள் காட்ட மறுப்பது ஏன்?

தமிழர்களே, தமிழர்களே இதன் அடிப்படையைப் புரிந்து இன உணர்வை வளர்த்துக் கொள்ளுங்கள்!

அதில்தான் நம் நிரந்தரப் பரிகாரம் உள்ளது.

கர்நாடகத் தமிழனையும், பம்பாய்த் தமிழனையும், ஈழத்தமிழனையும் காப்பாற்ற அது ஒன்றுதான் சரியான வழி!

**சென்னை**
**20-01-93**

## பட்டினிச் சாவி...

காரணமாக பொருமளவில் அழிந்துள்ளன. இடம்பெயர்ந்தவர்கள் தங்கள் தேவைக்குரிய வீடுகளை அமைத்துக் குடியிருப்பதற்காக கட்டிடப் பொருட்களை பெறமுடியாத நிலையில் கஸ்டமடைந்துள்ளார்கள்.

ஆதலால் உணவு, உறைவிடம், கல்வி, சுகாதாரம், வைத்தியம் ஆகியவற்றிற்குத் தேவையான பொருட்களையும், உபகரணங்களையும் தட்டுப்பாடின்றி அனுப்பிவைத்து வீடற்று, கல்வியற்று, நோயுற்றிருக்கும் மக்களுக்கு நிவாரணம் வழங்கவேண்டியது தங்களின் பெரும் கடமையாகும்.

இதற்காக-

• தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கும் இராணுவ அழுத்தங்களையும், பொருளாதாரத் தடைகளையும் நீக்கி, அத்தியாவசிய உணவுப் பொருட்களையும் அனுப்பிவைத்து ஏனைய பிற மாவட்டங்களில் விற்பனை செய்யப்படும் விலைக்கு கிடைக்கச் செய்ய வேண்டும்.

• யாழ் குடாமக்கள் தங்கள் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளும் பொருட்டு, (பிறமாவட்டங்களுக்குச் செல்வதற்கான சகல கடல், தரை மார்க்கமான போக்குவரத்துப் பாதைகளும் துண்டிக்கப்பட்டிருப்பதனால்) பூநகரிப்பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமை அகற்றி, மனிதாபிமான ரீதியில் சங்குப்பிட்டிப் பாதையைத் திறந்து மக்களின் போக்குவரத்திற்கான வசதியை ஏற்படுத்தவேண்டும்.

• தமிழ் மக்களுக்கு எதிரான பாரிய இராணுவ அழுத்தங்களையும், யுத்தத்தையும் உடனடியாக நிறுத்தி புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த வேண்டும்.

• சாதாரண ஒரு தனிமனிதனுக்குக் கிடைக்கவேண்டிய அடிப்படை வசதிகளான உணவு, உறைவிடம், கல்வி, சுகாதாரம், வைத்தியம் போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கான பொருட்களை எவ்வித கட்டுப்பாடுமில்லாமல் அனுப்பிவைக்க வேண்டும்.

• அப்பாவிப் பொதுமக்களை சுட்டும், வெட்டியும், குண்டு வீசியும், படுகொலைசெய்யும் இராணுவ அட்டூழியங்களை நிறுத்தவேண்டும்.

யாழ்ப்பாணத்தைப் போன்று கிளிநொச்சியிலும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்று நடாத்தப்பட்டு, இதேபோன்ற மகஜர் ஒன்றும் கிளிநொச்சி அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. ■

## காணாமல் போன...

நீ அறிஞ்சு வைச்சிருக்கிற விசயத்தில் ஒரு துளிதானும் எனக்குத் தெரியாது. எண்டாலும் உன் பேச்சில் இருக்கிற நியாயத்தை என்னால புரிஞ்சுக்க முடியுது. நானும் உன்னோட கூடவே வாறதெண்டு முடிவெடுத்திட்டேன்."

"ரா.... மு". நான் சந்தோசத்தில் திக்குமுக்காடிப் போனேன்.

* * *

நானும் ராமுவும் கடுகண்னாவைக்குச் சமீபமாக நடந்து கொண்டிருந்தோம். ராமுவின் கையில் இன்றைய பத்திரிகை ஒன்று. எனது கையில் சிறிய பொலித்தீன் பார்சல் ஒன்று. நாம் தொடர்ந்து நடந்துகொண்டிருந்தோம்.

ராமு இந்த வாரம் மலையகத்தில் காணாமல் போனவர்களின் பெயர்களையும் இடங்களையும் வாசித்துக் கொண்டு வந்தான். நான் மௌனமாக யோசித்துக் கொண்டு நடந்தேன். எனது மௌனம் அவனை என்னவோ செய்திருக்க வேண்டும். இடையே என்னை நிமிர்ந்து பார்த்தான். எனது முகத்திலிருந்த பிரிவுத்துயரத்தை கண்டு கொண்டானோ என்னவோ. கதையை வேறு பக்கம் திருப்பினான்.

"ராஜன் உனக்கொரு ஜோக் தெரியுமா? சிவபெருமானை ஆமி பிடிச்சிட்டானாம். இஞ்ச பார் பேப்பரில் இருக்கு."

"என்ன ராமு புதிர் போடுறே" நான் ஆவலுடன் கேட்டேன்.

"இல்லை ராஜன் இந்தப் பெரிய மலை எஸ்ரேட் இருக்கில்லையா. அங்கே ஆமி போனதாம். வேலை செஞ்சு கொண்டிருந்த ஒரு இளம் பையனை நீ பயங்கரவாதச் சந்தேக நபர் என்னு சொல்லி பிடிச்சுக் கிட்டுப் போய் சிறையில போட்டுட்டாங்களாம். ஒரு குற்றமும் செய்யாத அந்தப் பையன் 'சிவபெருமானே என்னையேன் இப்படிக் கொடுமைப்படுத்திறாங்க' என்னு கதறியிருக்கான். ஆமி 'ஆரடா அவன் சிவபெருமான். அவனும் உன்ட கூட்டாளியோ' எண்டு கேட்டு அவனுக்கு அடி அடியெண்டு அடிச்சுப் போட்டாங்களாம். பிறகு சிவபெருமானைத் தேடி வலை விரிச்சு அந்தப் பேருள்ள ஒருத்தனையும் பிடிச்சுப் போட்டாங்களாம். இப்ப சிவபெருமானும் சிறையில வாடுகிறாராம்." ராமு சொல்லிவிட்டுச் சிரித்தான். நானும் அவனுடன் கலந்து கொண்டேன்.

நாங்கள் கடுங்குளிர்ப் பிரதேசத்திலிருந்து விலகி புதியதொரு பாதையில் பயணத்தைத் தொடர்ந்தோம். குளிரில் விறைத்துப் போயிருந்த எமது உடல்கள் மெல்ல மெல்லச் சூடேறத் தொடங்கின. அதனுடன் சேர்ந்து மரத்துப் போன மனங்களும் விழித்துக் கொள்ளலாயின.

நாளை மலையகத்தில் நடக்கப் போவதை மனம் ஒரு கணம் சிந்தித்தது. எம்மைத் தேடி ஒரு தேடுதல் வேட்டை நடத்தப்படும். வீட்டிலும் விசாரணை நடக்கும். இறுதியில் அடுத்த வார காணாமல் போனவர்களின் பட்டியலில் எமது பெயரும் சேர்க்கப்படும். அதனாலென்ன, மலையக மாருதம் வீசுவதற்காக காணாமல் போனவர்கள் என்று எம் எதிர்காலச் சந்ததி கூறுவதற்காகவேனும் நாம் காணாமல் போவோமே. ■

# கனக்கின்ற நெஞ்சில் கனலை வளர்ப்போம்

மெல்ல மெல்ல அந்தச் செய்தி
காட்டுத் தீயாய்
திசைகளைச் சுட்டு
நெஞ்சைப் பிசைந்தது.

ஒரு நெருப்பு மல்லிகை
ஒன்பது மொட்டுக்களுடன்
கந்தகத் தீயில் கருகிப் போனதாம்.

ஆழக் கடலிடை - அந்த
ஜீவத் துடிப்புக்கள்
அடங்கிப்போனதாம்.

நம்ப மறுக்கின்ற
ஏழை மனது
இன்னும் நப்பாசையுடன்
அந்தச் செய்தி மட்டும்
பொய்யாகக் கூடாதாவென்று...

கிட்டண்ணா...!
உங்களுக்கு அருகிருந்த காலங்கள்
மிக மிக சொற்பம்தான்.

பேச்சிலும் மூச்சிலும்
செயலிலும் அசைவிலும்
உங்கள்
விடுதலைத் தாகத்தை
தரிசித்துக் கொண்டதும்....

தேசம் பிரிந்த அகதியாய்
முகங்கள் இழந்த எங்களினுள்ளே
உறங்கிய உணர்வை
சொல்லாலும் செயலாலும்
செதுக்கிவிட்டு
விடுதலை வேட்கையை
விதைத்து விட்டதும்....

தவறுகள் செய்கையில்
கண்டித்துத் திருத்தி
தந்தையாய் ஆனதும்....
செய்வன
திருந்தச் செய்கையில்
அன்பால் அணைத்து
அன்னையாய் ஆனதும்....

மனம் வாடி
உடல் சோர்ந்து போகையில்
வார்த்தைகளால் ஒத்தடம் தந்து
வைத்தியனாய் ஆனதும்.....

அம்மையாய், அப்பனாய்
நல்ல ஆசானாய்....

கடந்த கால நினைவில்
சஞ்சரிக்கும் மனது
கொடுமையான - அந்த
நிஜத்தை மட்டும்
ஜீரணிக்க மறுக்கின்றது.

எதைச் சொல்வது,
எப்படிச் சொல்வது
வார்த்தைகள் இங்கே
வற்றிப் போய்க் கிடக்கிறதே.

தலைவனின் தியாகத்தை
விளக்கிச் சொல்ல
சொற்கள் இன்றி
மொழிகூட இங்கே
கண்ணீர் வடிக்கிறதே.

மானுட வாழ்வின்
மகத்துவம் உணர்ந்து
அதற்காய் உழைத்து
மரணித்துப் போனவனே!

"போராளியின் மரணம்
வாழ்வின் முடிவல்ல"

அடிக்கடி உந்தன்
உதடுகளின் உச்சரிப்பு
இன்னும்
ஈரம் காயாமல்
செவிகளில் ஒலிக்கிறது.
அதனால்தான், அழுவதில்
எங்களுக்கும்
உங்களுக்கும்தான் இஷ்டமில்லை!

கனக்கின்ற நெஞ்சில்
கனலை வளர்த்து
ஒன்றாய் இணைந்து
ஒன்றாய் எழுந்து
உரமாய், உறுதியாய்
உங்களின்
இலட்சிய சிகரத்தை
எட்டித் தொடுவதாய்
சபதம் எடுப்போம்.

■ கஜன்



U.T.O
54 TAVISTOCK PLACE, LONDON WC1H 9RG
T 071-837 7162 F 071-278 5666

T.C.C
P.O.BOX 694, MULGRAVE NORTH
VICTORIA 3170, AUSTRALIA
Tel 03-457 6347 F-560 8224

T.C.C
VIA MARIANO STABILE - 34
90139 PALERMO, ITALY
Tel / Fax: 091-611 3179

L.T.T.E
P.O.BOX 47, 7600 STRUER
DENMARK
Tel/Fax: 97-841231

T.C.C
GROOT HERTOGINNELAAN 106
2517 BL DEN HAAG, NEDERLAND
T070-346 1963 F-346 1970

T.C.C
341 RUE DES PYRENEES
75020 PARIS, FRANCE
Tel: 435 81142 Fax: 435 81191

T.C.C
P.O.BOX 1699 VIKA
0110 OSLO - 1, NORWAY
Tel: 02-191260 F -190114

P.O.BOX 340251
5270 GUMMERSBACH 34
GERMANY

W.T.C.C
HOFJECKLIN, 7415 RODELS
SWITZERLAND
Tel/Fax: 01-2810852

Printed by BBOS LTD